உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-189

ஜூன் 16-30 2025

இந்தியாவில் இந்துமதத்தை பேசாமல் சவுதியிலும், லண்டனிலுமா பேச வேண்டும்?



e-magazine

படிப்பை கண்டு அஞ்சும் குழந்தைகள்

## படிப்பில் சிறப்படைய உதவும் சரஸ்வதியின் குரு ஹயக்ரீவர்

# சிவலிங்க வகைகள்



சிவ லிங்கங்கள் நான்கு வகைப்படும். அவற்றில் முதலாவதானது ஆலயங்களில் வைத்து பூஜிக்கப்படும் ‘அசல லிங்கம்’ என்பதாகும். ஆலயங்களுக்குள் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ள சிவலிங்கத்தை ‘பரார்த்த லிங்கம்’ என்றும் கூறுவார்கள். அது சுயம்பு லிங்கம், காண லிங்கம், தைவிக லிங்கம், ஆரிட லிங்கம், மானுடலிங்கம் என ஐந்து வகைப்படும்.

அவற்றுள், சுயம்பு லிங்கம் என்பது தானாகத் தோன்றியது ஆகும்.

சிவபெருமானின் புதல்வர்களான வினாயகர் மற்றும் முருகப்பெருமான் போன்றவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டதை காணலிங்கம் என்பார்கள்.

தைவிக லிங்கம் என்பது விஷ்ணு பகவானும் பிற தேவர்களும் சேர்ந்து ஸ்தாபித்தவை ஆகும்.

ஆரிட லிங்கம் ரிஷி முனிவர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை. அவற்றை சில ராக்ஷசர்களும் அசுரர்களும் கூட ஸ்தாபித்து இருக்கிறார்கள்.

மனிதர்கள் ஸ்தாபித்தவற்றை மானுட லிங்கம் என்பார்கள்.

ஆலய கோபுரங்களையே கூட தூல லிங்கம் என்றும் கூறுவார்கள்.

சிவன் இன்றி சக்தி இல்லை, அது போலவேதான் சக்தி இல்லாமல் சிவனும் இல்லை. ஆகவே பிரபஞ்சத்தைப் படைத்த சிவபெருமான் எனும் பரப்பிரும்மன் என்பது சிவனும் சக்தியும் இணைந்துள்ள சிவசக்தி ரூபமே என்பதினால் சிவனை தனியான உருவிலே பூஜிக்காமல் சிவசக்தியான லிங்க உருவிலே பூஜிக்கிறார்கள்.

# சிவராத்திரி சித்தர்

திருவண்ணாமலையில் ஒரு மாத சிவராத்திரி அன்று வேடனால் அடிபட்டமான்ஒன்று தப்பி ஓடி வந்து ஒரு மடத்திற்குள் புகுந்து படுத்துக் கொண்டது. மரணிக்கும் தருவாயில் இருந்தது. அன்று அந்நாட்டு மன்னன் அன்னதானம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்ய, உணவு வகைகள் தயாராகிக் கொண்டு இருந்தன. கவலைக்கு இடமான மானின் நிலையை அறிந்த மன்னன் மான் இறந்துபோனால் அன்னதானம் பங்கப்படுமே என்று மடத்திலிருந்த சித்தர் ஒருவரிடம் தன் கவலையைத் தெரிவித்தான்.

"கவலை வேண்டாம் மன்னரே!" எனக்கூறி விட்டு, மடத்தின் அருகிலேயே மறைவான ஓரிடத்தில் படுத்துக் கொண்டு, உயிருக்குப் போராடும் மானின் உடலில் தன் ஆத்மாவை செலுத்தினார்.

உடனே மான் துள்ளி எழுந்து மடத் தை விட்டு வெளியே ஓடி, சித்தர் படுத்துக் கொண்டு இருந்த இடத்திற்கு அருகே சென்று படுத்து உயிரை விட்டது. சித்தரும் தன் ஆத்மாவை மானின் உடலில் இருந்து வெளியேற்றி தன் உடலில் செலுத்தி எழுந்து கொண்டார்.

அன்னதானம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மனம் மகிழ்ந்த மன்னன் சித்தரின் காலில் விழுந்து வணங்கி ஆசி பெற்றான். மடத்திற்காக நிலங்களையும் பசுக்களையும் வணங்கினான். அந்த சித்தர் அடுத்த சிவராத்திரி அன்று முக்தி அடைந்தார். இந்தக் காரணத்தால் சிவராத்திரி சித்தர் என அவர் போற்றப்பட்டார்.

ஒவ்வொரு சிவராத்திரி அன்றும் இவர் சூட்சும உடலில் திருவண்ணாமலை கிரிவலம் செய்வதாக மக் கள் நம்புகின்றனர்.



e-magazine
aanmeegamalar.com



# சிலை வழிபாடு ஏன்

## ரமணமகரிஷியின் விளக்கம்

e-magazine
aanmeegamalar.com

ரமண மகரிஷியிடம், இரண்டு மாற்றுமத அன்பர்கள் வந்தனர். அவர்களுக்கு உருவ (சிலை) வழிபாடு பற்றி சந்தேகம் இருந்தது! திருவண்ணாமலைக்கு வந்தனர்.

**மாற்றுமத பக்தர்:** கடவுளுக்கு உருவம் உண்டா?

**மஹரிஷி:** மௌனமாக... (ஒன்றும் பேச வில்லை)

**பக்தர்:** கடவுளுக்கு உருவமில்லை என்று நாம் எடுத்துக்கொண்டால், சிலைகளைக் கும் பிடுவது சரியா..?

**மஹரிஷி:** கடவுள் இருக்கட்டும்., உங்க ளுக்கு உருவம் உண்டா...?

**பக்தர்:** ஆம், எனக்கு உருவம் உண்டு; பெயர் உண்டு.

**மஹரிஷி:** சரி, நீங்கள் ஆழ்ந்து தூங்கும் போது, உங்களுக்கு உருவம் இருக்கிறதா...?!

**பக்தர்:** விழித்து எழுந்தவுடன், நான் தூங் கிக் கொண்டிருந்திருக்கிறேன் என்பது தெரி கிறது, ஆகவே, அநுமானத்தின் மூலமாக நான் இப்படி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருக்கிறேன் என்பது தெரிய வருகிறது.

**மஹரிஷி:** நீங்கள் உடல்தான் என்றால், நீங்கள் இறந்த பிற கும் அது இருக்கிறது. அதை ஏன் புதைக்க வேண்டும்...? உடல் தன்னைப் புதைப்பதை எதிர்க்க அல்லவா வேண்டும்...?

**பக்தர்:** இல்லை, நான் இந்த உருவம் இல்லை. உள்ளே இருக்கின்ற ஜீவன்..

**மஹரிஷி:** அந்த ஜீவனுக்கு உருவம் இருக் கிறதா என்று கொஞ்சம் உள்ளே பாருங்கள்!

**பக்தர்:** இல்லை, உருவம் இல்லை ஆனால் நான்இருப்பதை இயல்பாகவே உணரமுடிகிறது.

**மஹரிஷி:** அப்படி என்றால், உண்மையி லேயே நீங்கள்உருவம் இல்லாதவர்! ஆனால் இப்போது உடல் மூலமாக உங்களை அடையாளம் கொள்கிறீர்கள். ஒருவர், தன் னை உடலோடு அடையாளப் படுத்திக் கொள்ளும் வரை, கடவுளுக்கும் உருவம் இருக்கத்தான் செய்யும்!! எப்போது, தான் உருவமற்றவர்தான் என்று உணர்கிறாரோ, அப்போதே கடவுளுக்கும் உருவம் இல் லாமல் போய்விடும்...



தங்களை உடலோடு அடையாளம் காண் பவர்கள் உருவம் இல்லாத கடவுளை, சுலபமாக சிந்தையில் கொண்டு வந்து உணர்வதற்கும்; தியானிப்பதற்கும்; சுலபமாக எட்டிப்பிடித்து உணர்வதற் கும்; ஒரு உருவமாகக் கொள்வதில் எந்த தவறும் இல்லை...!

# விலக்க வேண்டிய பொருள்களை விலக்கினால்
# பத்தியம்



பத்தியம் என்பது நன்மை செய்யும் ஒன்று எனவும், நோயாளிக்கு இசைந்த உணவு என்றும் பொருளுரைக்கப்படுகிறது.

நோய் வாய்ப்பட்ட நோயாளிக்கு வந்துள்ள நோயின் வீரியத்தை அதிகப்படுத்துகின்ற உணவை உண்டால் நோய் தீவிரமடையும். அதனால், விலக்க வேண்டிய பொருள்களை விலக்கிவிட வேண்டும்.

நோய்க்கு ஆதரவாக இல்லாமல், நோயாளியின் உடல் நலத்துக்கு ஆதரவாக அமையும் பொருள்களைப் பத்தியப் பொருள் என்றும், அதனைக் கடைப்பிடித்து வருவதற்குப் பெயர் பத்தியம் என்றும் கூறுவர்.

பத்தியம் என்பதை ஒழுங்கு, ஒழுக்கம் என்னும் கருத்துடைய சொல்லாகக் கொள்ளலாம்.

பத்தியம் என்னுஞ்சொல் 'லங்கணம்' என்னுஞ் சொல்லாலும் வழங்கப்படுகிறது.

லங்கணம், பட்டினி என்னும் பொருளைத் தருகின்ற வட சொல்லாகும்.

நோயாளி மருந்துகளை உண்ணும் போது, மருந்தின் வீரியம் உடலுக்குள் சென்றடைய சில பொருள்கள் தடையாக இருக்கின்றன.

மருந்தின் தன்மையை மாற்றக் கூடிய அல்லது நோயாளிக்கு எதிர் வினைகளை உண்டாக்கக் கூடிய உணவுகள் உண்ணப்படாமல் தடுக்கப்படுவதும் பத்தியமாம்.

பத்தியத்தின் தேவை நோய் வந்த போதும், நோய்க்கான மருந்துண்ணும் போதும் ஒதுக்கப்பட வேண்டிய பத்தியப் பொருள் ஒதுக்கப் படாவிட்டால் நோய் குணமாகாது என்பது சித்த மருத்துவக் கொள்கையாகக் கூறப்படுகிறது.

"பத்தியம் இல்லார்க்கு என்றும் பகர்பிணி நீங்காது
என்று சத்திய சித்த வேதம்
சாற்றிய உண்மை யாலே."

பத்திய ஒழுக்கம் பிணி நீங்கத் தேவையான ஒன்று என்பதே மருத்துவ உண்மை என்கிறது.

"திருப்பாகும் பத்தியந்தான் இல்லாவிட்டால்
தீராது சொல்லிவிட்டேன் திறந்தான் காணே"

என்று, பத்தியம் இல்லாவிட்டால் நோய்குணமாகாது என்று அகத்தியர் நூல் உறுதிப்படுத்துகிறது.

நோயைக் குணப்படுத்திக் கொள்ள தேவைப் படுகின்ற மருத்துவத்தின் அங்கமாகவே பத்தியமும் கருதப்படுகிறது.

### பத்தியத்தின் பயன்

பத்தியத்தினால் நோய்க்காக உண்ணப்படும் மருந்து நோயைப் போக்கக் கூடிய பலனைத் தருவதாக அமையும். பத்தியம் தவறிவிட்டால், நோய் தீர்க்கும் பணியிலிருந்து மருந்தும் தவறிவிடும்.



நோயைத் தீர்க்கும் மருந்துவப் பணியைச் செய்கின்ற மருத்துவனுக்கு, அவன் தருகின்ற மருந்தை விடவும், அவன் கூறுகின்ற பத்தியமே அவனின் மருத்துவ வெற்றிக்குக் காரணமாக அமையும். பத்தியமுறை மருத்துவமே சித்த மருத்துவத்தின் நுண்ணறிவுக்கு எடுத்துக் காட்டாகும். பத்தியம், மருத்துவம் சார்ந்த முறை என்பதுடன், மருந்தினும் சிறந்ததாகவும் கூறப்படுகிறது.

## படிப்பை கண்டு அஞ்சும் குழந்தைகள்

# படிப்பில் சிறப்படைய உதவும் சரஸ்வதி தேவி குரு ஹயக்ரீவர்

e-magazine
aanmeegamalar.com

பகவான், விஷ்ணு பிரளய காலத்தில் உலகையும் மக்களையும் தன்னுள்ளே தாங்கி, ஆலிலை பாலகனாய் பிரளயகால சமுத்திரத்தில் யோக நித்திரை செய்து வந்தார்.

பின் உலகப் படைப்பதற்காக, தன் நாபிக் கமலத்தில் இருந்து பிரம்மனைப் படைத்து நான்கு வேதங்களையும் உபதேசித்தார். ப்ரம்மனும் படைப்புத்தொழிலை ஆரம்பித்தார்.

நான்கு வேதங்களின் துணை கொண்டு, அந்த வேதங்கள் பின் தொடர்ந்து வர ப்ரம்மா தனது சிருஷ்டி தொழிலை நடத்திக் கொண்டிருந்தார்.

ஒருமுறை பெருமாளின் நாபிக்கமலத்தில் உள்ள ஓர் இதழில் இரண்டு தண்ணீர்த்திவலைகள் தோன்றி, மது, கைடபன் என்ற அசுரர்களாக மாறினர்.


ஆன்மிகமலர்

இவர்கள் பெருமாளிடமிருந்து பிறந்ததைரியத்தில், தங்களைப் பிரம்மனைவிடவும் பெரியவர்களாய் நினைக்க வேண்டும் என்ற எண்ணத்தால் ப்ரம்மனிடமிருந்த வேதங்களை அபகரித்து, தாங்களே படைப்புத்தொழில் செய்ய ஆசைப்பட்டனர். அந்த வேதங்களைக் குதிரை வடிவில் வந்து ப்ரம்மனிடம் இருந்து பறித்துச் சென்றனர்.

வேதங்கள் இல்லாமல் சிருஷ்டியின் அர்த்தமே இல்லையே உலகை இருள் சூழ்ந்தது ப்ரம்மா செய்வதறியாது திகைத்தார்.

மஹா விஷ்ணுவிடம் சென்று முறையிட்டார் பிரம்மா, மஹாவிஷ்ணு இவ்வுலகைக் காக்கவும், வேதங்களை மீட்டு வரவும், அசுரர்கள் எந்தக் குதிரை வடிவில் வந்தனரோ, அந்தக் குதிரை வடிவிலேயே தாமும் செல்லத் தீர்மானித்தார்.

குதிரை முகம், மனித உடல், ஆயிரம் கோடி சூரியர்களையும் மிஞ்சும் ஒளி, சாட்சாத் அந்த சூரிய, சந்திரர்களே இரு கண்கள், கங்கையும், சரஸ்வதியும் அந்தக் கண்களின் இமைகள் சங்கு, சக்கரதாரியாக இந்த திவ்ய சொரூபத்துடனேயே விஷ்ணு வேதங்களை மீட்டு எடுத்தார்.



அசுரர்கள் கைப்பட்டதால் தங்களது பெருமை குன்றியதாக நினைத்த வேதங்கள் புனிதமாக்கும்படி பெருமாளை வேண்டின.

குதிரைமுகத்துடன் இருந்த பெருமாள் வேதங்களை உச்சி முகர்ந்ததால், அந்த மூச்சுக்காற்றில் வேதங்கள் புனிதமடைந்தன.

அசுரர்களுடன் போரிட்ட ஹயக்ரீவர் உக்கிரமாக இருந்தார் என்றும், அவரை குளிர்விக்க லட்சுமியை அவர் மடியில் அமர்த்தினார்கள்.

இதனால் அவரை லக்ஷ்மி ஹயக்ரீவர் என்றனர். வேதங்களை மீட்டவர் என்பதால், ஹயக்ரீவரர் கல்வியின் தெய்வமாகிறார்.

கல்வி உள்ள இடத்தில் லட்சுமியாகிய செல்வம் சேரும் என்பதால், லட்சுமியை இடது தொடையில் அமர்த்திருக்கிறார்.

- ✶ கல்வி கடவுள்' என்ற சிறப்பை பெற்றவர் ஹயக்ரீவர்.
- ✶ ப்ரம்மனை படைத்து அவருக்கு வேதங்களை உபதேசித்தவரும் ஹயக்ரீவர்தான் என்று வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ✶ உபநிஷத்தில் ஹயக்ரீவர் பற்றியே அதிகம் சொல்லப்பட்டுள்ளது.
- ✶ சரஸ்வதிக்கே குரு என்ற சிறப்பு ஹயக்ரீவருக்கு உண்டு.
- ✶ வைணவ ஆச்சார்யார்களில் ஒருவரும், சுமார் பல ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவருமான வாதிராஜ தீர்த்தர் ஹயக்ரீவர் அருளால் சகல கலைகளிலும் சிறந்து விளங்கினார்.
- ✶ ஹயக்ரீவர், எப்போதும் பளீர் வெள்ளை நிறத் தில் இருப்பார்.
- ✶ மகாபாரதம், தேவிபாகவதம், ஹயக்ரீவ கல்பம் போன்ற இதிகாச புராண நூல்கள் ஹயக் ரீவரின் பெருமைகளை பேசுகின்றன.
- ✶ ஹனுமன் சஞ்சீவி மலையை தூக்கிக் கொண்டு வந்தபோது ஹயக்ரீவரை வணங்கினார் என்று வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.
- ✶ காஞ்சீபுரத்தில் தவம் இருந்த அகஸ்தியரை பாராட்ட அவர் முன் ஹயக்ரீவர் தோன்றினார் என்று ப்ரம்மாண்ட புராணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- ✶ ஸ்வாமி தேசிகருக்கு, ஹயக்ரீவர் எந்த கோலத்தில் காட்சி கொடுத்தாரோ, அதே கோலத்தில், 108 திவ்ய தேசங்களில் ஒன்றான திருவஹீந்திரபுரத்தில் காட்சி அளிக்கிறார்.
- ✶ புத்த மதத்தில் 108 வகையான ஹயக்ரீவர்கள் இருப்பதாகவும் அவர்கள் தோல் நோய்களை தீர்ப்பவராகவும் நம்புகிறார்கள்.
- ✶ குதிரை போல கனைத்து இவர் அசுரர்களை விரட்டியதால் திபெத் நாட்டு குதிரை வியா பாரிகள் ஹயக்ரீவரை தங்கள் காவல் தெய்வமாக வழிபட்டதாக புத்தமதத்தில் கூறப்பட்டுள்ளது.
- ✶ ஹனுமன் தூக்கிக் கொண்டு போன சஞ்சீவி மலையில் இருந்து விழுந்த ஒரு சிறுபகுதி மலைதான் தற்போது ஹயக்ரீவர் வசிக்கும் திருவஹீந்திபுரம் என்று கூறப்படுகிறது.
- ✶ மஹாவிஷ்ணுவின் அம்சமான ஹயக்ரீவர்தான் லலிதா ஸஹஸ்ர நாமத்தை உபதேசம் செய்த வராவார்.
- ✶ ஸ்வாமி தேசிகன், வாதிராஜ ஸ்வாமிகள் ஆகி யோர் ஸ்ரீஹயக்ரீவரை ஆராதித்து நீடித்த புகழ் பெற்றனர்.
- ✶ சங்கு, சக்கரம், புத்தகம், மணிமாலை, சின் முத்திரை, தரித்தவராக லட்சுமி தேவியோடு கூடியவராகத் திகழ்கிறார் ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவர்.
- ✶ ஹயக்ரீவர் ஆனந்த மயமான வாழ்வு தருபவர் ஆவார்.
- ✶ ஹயக்ரீவரின் மந்திரத்தை சுவாமி தேசிகருக்கு ஸ்ரீகருடாழ்வாரே தோன்றி உபதேசித்தார் என்பது சரித்திரம்.
- ✶ ஹயக்ரீவருக்கு பரிமுகன் என்றொரு பெயர் உண்டு. பரிமுகன் என்றால் பரிந்த முகம், பரியும் முகம், பரியப் போகும் முகம் என்று மூன்று காலத்தையும் காட்டுகிறது.
- ✶ ஹயக்ரீவரை ஆராதித்தவர்கள் அனைவரும் நிறைந்த ஞானமும், நீடித்த செல்வமும், பெரும்புகழும் பெற்று இன்புறுவார்கள் என்பது ஐதீகம்.
- ✶ ஹயக்ரீவர், அன்னையை பூஜித்து அம்பாள் வழிபாடுகள் செய்ததாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது.
- ✶ திருவஹீந்திபுரம் மலை மேல் அமைந்துள்ள லக்ஷ்மி ஹயக்ரீவரை வழிபட்டால் செல்வம் சேரும்.
- ✶ ஆடி பௌர்ணமியில்தான் ஹயக்ரீவர் அவ தாரம் நிகழ்ந்தது என்பார்கள்.
- ✶ ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம், ரகசியங்களில் மிக வும் ரகசியமானது என்று ஹயக்ரீவர் குறிப் பிட்டுள்ளார்.
- ✶ ஹயக்ரீவருக்கு வியாழக்கிழமைகளில் ஏலக் காய் மாலை சாற்றுவது வழக்கம்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்



தாய் தந்தையரின் தலையாய கடமைகளுள் ஒன்று தங்கள் குழந்தைகளின் கல்விக்குச் சரியான வழிகாட்டுவது.

எவ்வளவு தான் செலவழித்து நல்ல பள்ளியில் பயில்வித்தாலும், பயிலும் குழந்தைகளின் தரமும் உழைப்பும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் அருளும் தான் அக்குழந்தை நன்றாகப் படிக்கிறதா என்பதை உறுதி செய்கிறது.

படிப்பில் சுமாராக உள்ள குழந்தைகள், அல்லது அவர்களுக்காக அவர்களுடைய தாய் தந்தையர், கலைமகளுக்கே ஞானத்தை அளித்த ஸ்ரீஹயக்ரீவரைத் துதித்தால் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஹயக்ரீவ த்யான ஸ்லோகம்

ஞானானந்தமயம் தேவம்
நிர்மலஸ்படிகாக்ருதம்
ஆதாரம் ஸர்வ வித்யானாம்
ஹயக்ரீவம் உபாஸ்மஹே''

அர்த்தம்: ஞானமும் ஆனந்தமயமமானவரும், தூய்மையான ஸ்படிகம் போன்ற தேகத்தை உடையவரும், சகல கல்விக் கலைகளுக்கு ஆதாரமுமானவரான ஸ்ரீஹயக்ரீ வரை நான் உபாசிக்கிறேன்'' என்று அர்த்தமாகும்.

இதை எல்லோரும் நாள்தோறும் ஒரு தடவை யாவது கூறி எல்லா வளமும் பெறலாம்.

# இந்துக்கள் மேற்கொள்ளும் முக்கியமான சில சடங்குகள்







இந்துக்கள் தங்களின் வாழ்நாளில் மேற் கொள்ள வேண்டிய முக்கியமான சில சடங்குகளை தர்மநூல்கள் வரையறுத்துக் காட்டுகின்றன. சடங்கு என்பது ஒரு முக்கிய நிகழ்ச்சி எனப் பொருள் படும். சடங்குகளை எளிமையான முறையில் மேற் கொள்வதே சிறப்பாகும். இவை சம்ஸ்காரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்துக்களின் ஐந்து முக்கிய கடமைகளில் 'சம்ஸ்காரமும்' ஒன்றாகும். 'சம்ஸ்காரம்' என்றால் முறைப்படுத்துதல் அல்லது தயார்படுத்துதல் எனப் பொருள்படும். கிரியசூத்திர நூல் 16 புற சடங்குகளை விவரிக்கின்றது. இந்த பதினாறு சடங்குகளும் புறத்தில் செய்யப்பட வேண்டியவை. அகத்தில் செய்யப்பட வேண்டிய எட்டு சடங்குகளையும் இந்நூல் விளக்குகின்றது. இவை கௌதமர் தர்மசூத்திரம் (8:148:25) இலும் விளக்கப்பட்டுள்ளன.

**அகத்தின் எட்டு (8) சடங்குகள்:**

1. எல்லா உயிர்களிடமும் கருணை
2. பொறுமை
3. பொறாமை இல்லாமை
4. மனத்தூய்மை
5. சாந்தம்
6. நல்ல எண்ணங்களைக் கொண்டிருத்தல்
7. தாராளகுணம்
8. பேராசை இல்லாமை

**புறத்தின் பதினாறு (16) சடங்குகள்:**

**1. திருமணம் (விவாகம்):** தகுதிபெற்ற வயதினை உடைய ஓர் ஆண் ஒரு பெண்ணின் கரங்களைப் பற்றி அக்கினி சாட்சியாக ஏழு முறை அக்கினியைச் சுற்றி வருதல். இறைவன் ஜோதிவடிவானவர். எனவே அக்கினியான ஜோதியை சாட்சியாக கொண்டு திருமணம் நடக்கின்றது. தமிழர்களின் திருமணத்தின்போது மணமகன் மணமகள் கழுத்தில் தாலி அணிவிக்கிறான். இது மிகவும் முக்கிய சடங்கு ஆகும். பெரும்பாலான இந்துக்கள் வாழ்நாளில் இந்த சடங்கு மிக முக்கியமானதாக மேற்கொள்ளப்படுகின்றது.

**2. முதல் இரவு (கர்பதானம்):** திருமணமான ஆணும் பெண்ணும் குழந்தை பாக்கியத்தைப் பெறுவதற்காக இறைவனை பிரார்த்தனை செய்து கொண்டு தாம்பத்திய பந்தத்தில் ஈடுபடுதல். தாயான பெண் ஓர் உயிர் தன் உடலில் தங்கி உடலாக உருவெடுப்பதற்கு தன் கருவறையைத் 'தானமாக' தருகிறாள். கணவனும் மனைவியும் விளக்கேற்றி இறைவனை மனதார வழிபட்டு வாழ்க்கையைத் துவங்குவதன் மூலம் இந்த சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**3. கருவுற்றல் (பும்சவனம்):** கருவுற்ற மனைவி தாய் ஸ்தானத்தை அடைகிறாள். எனவே கணவன் அவளை தாயைப் போல பராமரித்து பணிவிடை செய்யவேண்டும். அவள் மனம் நோகும்படி ஒரு வார்த்தை கூட பேசாமல் விரதம் மேற்கொள்ள வேண்டும். பிருகதாரண்யக







உபநிடதம் (6.4), மனைவி கர்ப்பமாக இருக்கும் நேரத்தில் கணவன் அவளுக்கு ஆரோக்கியமான உணவைச் சமைத் துக் கொடுக்க வேண்டும் (அல்லது ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்) என அறிவுரை செய் கின்றது. கணவன் மனைவிக்காக பிரார்த்தனை மேற்கொள்ள வேண்டும். தன் மனைவி குழந் தையை நல மாகப் பெற்றெடுக்கும் வரை இந்த சடங்கை கடைப்பிடிக்க வேண்டும்.

4. வளைக்காப்பு (சீமந்தம்): கருவுற்ற பெண் எந்தவொரு சிரமமும் இல்லாமல் மனமகிழ்ச்சியுடன் குழந்தையைப் பெற்றெடுப்பதற்காக மேற்கொள்ளப் படும் முக்கிய சடங்காகும். பெரும்பாலும் 8ஆவது அல்லது 9ஆவது மாதத்தில் மேற் கொள்ளப்படுகின்றது. கர்ப்பமாக இருக்கும் பெண்மணிக்கு அவளின் உறவினர்களும் நண்பர்களும் பழங்களும் பலகாரங்களும் ஊட்டி விட்டு மகிழ்ச்சிப் படுத்துவார்கள். மேலும் வளையல்களும் அணிவிப்பார்கள். கர்ப்பிணி பெண் ஆசைபடும் அனைத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும், அவளுக்கு வருத்தம் ஏற்படுத்தும் விஷயங்களைத் தவிர்த்துவிட வேண்டும் என யஜ்ஞவல்கய ஸ்மிரிதி (3:79) தெரிவிக்கின்றது. மேலும் பிரசவ காலம் நெருங்கும் போது அவளின் கணவன் (மற்றும் பெற்றோர்) எப்போதும் அவளின் அருகாமை யில் இருக்கவேண்டும் என்றும் நீண்டதூரப் பயணத் தை தவிர்த்து விட வேண்டும் எனவும் அறிவுரைக் கப்படுகின்றது. இது மிக முக்கியமான சடங்கு.


5. குழந்தை பிறந்த சடங்கு (ஜாதகர்மன்): குழந் தை பிறந்ததைக் கொண்டாடும் சடங்காகும். இந்து தர்மத்தைப் பொறுத்தவரை ஒருவன் இரண்டு முறை பிறக்கின்றான். தாயின் கருவறையில் தோன்றி பிறப்பது ஒருமுறை, கல்வியைத் தொடங்கும்போதும் இரண்டாவது முறை ஆகும். பிறந்த குழந்தையின் நாவில் தேன் அல்லது சீனிப்பாகு தடவி இச்சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தசடங் கை வீட்டிலுள்ள பெரியவர்கள் அல்லதுகுழந்தை யின் தாய்தந்தை மேற்கொள்வர்.அதன்பிறகு அனை வரும் குழந்தையின் நீண்ட ஆயுள், நிறைவான அறிவு மற்றும் தாயின் நலம் ஆகியவற்றிற்காக பிரார்த்தனை மேற்கொள்வர்.

6. குழந்தைக்குப் பெயர்சூட்டுதல் (நாமகரணம்): குழந்தை பிறந்த சில தினங்களில் குழந்தைக்குப் பெயர் சூட்டப்படுகின்றது. அர்த்தமுள்ள மற்றும் இனிமையான பெயரை தேர்ந்தெடுத்து குழந் தைக்குச் சூட்டுவர். குழந்தையை குளிப்பாட்டி, புத்தாடை அணிவித்து, வீட்டு பூஜை அறையில் குழந்தையின் பெற்றோர் அந்த குழந்தையை மடியில் அமர வைத்து அதன் காதில் தேர்ந் தெடுத்த பெயரை கூறுவார்கள்.

7. குழந்தையை முதன்முதலில் வெளியிடத்துக்கு அழைத்துச் செல்லுதல் (நிஷ்கிராமணம்): குழந்தை பிறந்து ஒரு மாதம் நிறைவடைந்ததும் அந்தக் குழந்தையைக் கோவிலுக்கு அழைத்துச்செல்வார் கள். குழந்தையின் தாய், தந்தை, சகோதரர்கள், தாத்தா, பாட்டி ஆகியோரும் உடன் செல்வார்கள்.

8. குழந்தைக்கு முதல் சோறு ஊட்டுதல் (அன்ன பிராஷனம்): குழந்தை பிறந்து சில மாதங்களில், குழந்தைக்கு சில பற்கள் முளைக்க தொடங் கியவுடன் அதற்கு சோறு ஊட்டும் சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. தேனுடன் அல்லது பாலுடன் கலந்த சோற்றை அன்னையும் தந்தையும், உற்றார் உறவினரும் குழந்தைக்கு ஊட்டுவார்கள். பிறகு நண்பர்களும் அண்டை அயலார்களும் வருகைபுரிந்து குழந்தையுடன் அன்பு பரிமாறிக் கொள்வார்கள். அனைவரும் குழந் தை நீண்ட ஆயுளும் நிறைவான அறிவையும் பெற பிரார்த்தனை செய்து கொள்வார்கள்.

9. குழந்தைக்கு தலைமுடி நீக்குதல் (சூடாகரணம்): குழந்தை பிறந்த சில மாதங்களில், குழந்தையின் தலைமுடி முதன்முதலில் நீக்கப்படுகின்றது. தாய் தந்தையர் பாரம்பரிய உடைகளை அணிந்து







கொண்டு குழந்தையை கோவிலுக்கு அழைத்துச் சென்று மடியில் அமர்த்திக் கொண்டு குழந்தையின் தலைமுடியை நீக்குவர். தூய்மையான வாழ்க்கையின் மகத்துவத்தை உணர்த்துவதற்காக இந்த சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

10. குழந்தைக்குக் காது குத்துதல் (கர்ணவேதம்): குழந்தை பிறந்த ஓராண்டில், குழந்தையின் இரண்டு காதுகளிலும் தோடு குத்தப்படும். ‘செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்’ எனும் குறளைப் போல ஒரு மனிதனிடம் இருக்கும் செல்வங்களில் மிகவும் போற்றத்தக்கது அவனின் கேட்டல் திறன் தான். ஒருவன் தன் வாழ்நாளில் ஞானிகளின் வாய்ச்சொல்லைக் கேட்டு நடந்தால் அவனின் வாழ்க்கை பொன்போல மின்னும் என்பதை உணர்த்துவதற்காக இந்த சடங்கு மேற் கொள்ளப்படுகின்றது.

11. கல்வி ஆரம்பம் (வித்யாரம்பம்): குழந்தை மழலைமொழி பேசத் தொடங்கியவுடன் இந்த சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. குழந்தையின் பெற்றோர் அல்லது மற்ற குடும்ப உறுப்பினர் குழந்தையின் கையைப் பிடித்து ‘அ’ எனும் முதல் எழுத்தை எழுதி பயில்விப்பார்கள். பிறகு அடிப்படையான எழுத்துகளையும் எண்களையும் கற்றுத் தருவார்கள். குழந்தை பாடசாலையில் சேர்ந்து முறையான கல்வியைக் கற்க துவங்குவதற்கு முன் னர் அதற்கு அடிப்படையான கல்வியை வீட்டிலே கற்றுத் தர வேண்டும் என்பதை இச்சடங்கு உணர்த்துகின்றது.

12. பாடசாலையில் சேர்த்தல் (உபநயனம்): குழந்தை வளர்ந்து பாலகப் பருவம் எய்தியவுடன், அவனை/அவளை பாடசாலையில் சேர்க்க வேண்டும். இங்கு அந்த குழந்தை முறையான கல்வியைக் கற்க தொடங்கும். முறையான கல்வியை துவங்கும் போது ஒரு மனிதன் இரண்டாவது முறையாகப் பிறக்கின்றான் என சொல்லப்படுகின்றது. கல்வி கற்றுத்தரும் ஆசான் அவனுக்கு தாய்தந்தை ஆகின்றார். ஆரம்பகாலங்களில் உபநயனம் என்பது ஒருவன் யஜ்ஞோபவிதம் (பூணூல்) அணிந்து முறையான குருகுல கல்வியில் ஈடுபடுதல் ஆகும். இந்த சடங்கின் மூலம் அந்த குழந்தைக்கு கல்வியின் முக்கியத்துவமும் அவசியமும்உணர்த்தப்படுகின்றது. கல்வி தான் ஒருவனை பண்டிதனாக்குகின்றது. எனவே கல்வியில் தேர்ச்சிப் பெறும்வரை அவனுடைய எண்ணம் வெண்மையாக (தூய்மையாக) இருக்க வேண்டும்; தீமையானவற்றில் எண்ணம் சிதறி மாசுபடக் கூடாது எனவும் உணர்த்தப்படுகின்றது.

13. வேதங்களைக் கற்க தொடங்குதல் (வேதாரம்பம்): வேதங்கள் என்பது ரிக், சாம, யஜுர், அதர்வண ஆகியவை ஆகும். வேதம் என்றால் ஞானம் எனப் பொருள்படும். வேதங்களின்சாரமாக உபநிடதங்களும், உபநிடதங்களின் சாரமாக பகவத் கீதையும் விளங்குகின்றன. ஒருவன் தன் வாழ்க்கைக்குத் தேவையான வித்தைகளை (தொழில்திறன்களை) கற்றதோடு விட்டுவிடாமல், அவன் வேதங்களையும் அவசியம் கற்க வேண்டும். மேலும் திருக்குறள், திருமுறை, பிரபந்தம் போன்ற நூல்களும் நல்லறிவைதரும் நூல்களாகும். ஒருவன் வாழ்க்கையில் பணம் ஈட்டுவதற்கு தேவையான வித்தைகளை மட்டும் கற்பதோடு நிறுத்திவிடாமல் நல்லொழுக்கத்தையும் நல்லறிவையும் தரும் நல்ல நூல்களையும் கற்கவேண்டும்.

14. பருவமடைந்த சடங்கு (கேஷாந்தம்):ஆரம்பகாலங்களில் ஆண்களும் பெண்களும் பருவமடைந்தவுடன் ‘கேஷாந்தம்’ அல்லது ’ரிதுசுத்தி’ எனப்படும் சடங்கு மேற்கொள்ளப்பட்டன. பருவ வயதை (பெரும்பாலும் 16 வயதை) அடைந்த ஆணின் சிகையும் முகத்திலுள்ள முடிகளும் மழிக்கப்படும். பிறகு நீராடி விட்டு, பாரம்பரிய உடை அணிந்துகொண்டு, இனி அவனுக்கு உண்டாகும் பாலுணர்வு ஆசைகளை எப்போதும் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க

விரதம் மேற்கொள்கிறான். அதேபோல்பருவமடைந்தபெண் களும் நீராடிவிட்டு பாரம்பரிய உடை அணிந்து விரதம் மேற்கொள்கின்றனர்.



பண்டைய காலத்தில் இது எளிமையான ஒரு சடங்கு ஆகும். ஆனால் தற்போதுஇந்த சடங்கு ஆண்களுக்காக மேற் கொள்ளப்படுவது மிக அரிதாகும். ஆயினும் பெண்களுக்கு மிகவும் பெரிதாகவும் ஆடம்பரமாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. காலப்போக்கில் இந்த சடங்கில் சாஸ்திரங்களில் பரிந்துரைக்கப்படாத நிறைய விஷயங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**15. பட்டம் பெறுதல் (சமாவர்தனம்):** உயர்நிலைக் கல்வியில் தேர்ச்சி அடைந்து பட்டம் பெறும் சடங்காகும். இது பெரும்பாலும் ஒருவன் உயர்கல்வியை முடித்துவிட்டப் பின்னர் மேற்கொள்ளப்படுகின்றது. பட்டம் பெற்றவிட்ட அவன் எப்போதும் சத்தியத்தையும் தர்மத்தையும் போற்ற வேண்டும், நேர்மையையும் கடமையையும் கடைப்பிடிக்க வேண்டும், முக்கியமான ஒன்று என்னவென்றால் அவன் எப்போதும் கற்பதை நிறுத்தக் கூடாது என தைத்திரிய உபநிடதம் (1.11.1) குறிப்பிடுகின்றது. “கற்றது கைம்மண் அளவு, கலலாதது உலக அளவு” அல்லவா? பட்டம் பெற்றவுடன் பெற்றோர் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுவிட்டு, ஆசானுக்கு நன்றி கூறிவிட்டு, கோவிலுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபடுவதே இந்த சடங்குமுறை ஆகும். ஆரம்பகாலத்தில் இந்த சடங்கு குருகுலக் கல்வியை முடித்துவிட்டு திரும்பும் போது மேற்கொள்ளப்பட்டது.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

(இதன்பிறகு ஒருவன் திருமண வாழ்க் கையில் ஈடுபட எண்ணங்கொண்டால், அவன் திருமண சடங்கை மேற்கொள்வான். குழந்தை பெற்றவுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மற்ற மற்ற சடங்குகளையும் தன் குழந்தை(களு)க்கு மேற்கொள்வான்.)

**16. இறுதிசடங்கு (அந்தயெஷ்டி):** ஒருவன் வாழ்க் கையின் இறுதிச் சடங்கு என்பது அவன் இறந்து போனவுடன் அவனின் உடலுக்கு அவனின் சொந்தபந்தங்களும் நண்பர்களும் மேற்கொள்ளும் முக்கிய சடங்காகும். இது அவனுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மேற் கொள்ளப்படுகின்றது. குழந்தைகளின் உடல் புதைக்கப்பட வேண்டும் எனவும் வாலிப வயதை தாண்டிய பெரியவர்களின் உடல் தகனம் செய்யப்பட வேண்டும் எனவும் ரிக்வேதம் (10:16) அறி வுறுத்துகின்றது.

இந்த சடங்கு ஒரிரண்டுநாட் கள் முதல் பதினாறுநாட்களுக்கு நீடிக்கின்றது. இறந்தவரின் உடல் நீராடப்பட்டு, புத்தாடைகள் அணி விக்கப்பட்டு, கால் கட்டைவிரல்கள் ஒன்றாக கட்டப்பட்டு, நெற்றியில் திலகம் இடப்படுகின்றது. பின்னர் அவரின் உடல் முறையான ஓர் இடத்திற்குக் கொண்டு செல்லப் பட்டு தகனம் செய்யப்படுகின்றது. பதினாறு நாட்களுக்கு துக்கம் அனுசரிக்கப்பட்டு பின்னர் பதினாறாம் நாள் ஏழை எளியவர்களை வீட்டிற்கு அழைத்து அவர்களுக்கு உணவு தானம் வழங்கபடுகின்றது. இறந்தவரின் சார்பாக ஏழை எளியவர்களுக்குத் அன்ன தானம் வழங்கு வதால், அவரின் ஆன்மா இனிவரும் பிறவிகளில் நற்கதி அடையும்.

இந்த பதினாறு சடங்குகளையும் இந்துக்கள் கட்டாயமாக மேற்கொள்ளவேண்டும் என எந்த சாஸ்திரநூலும் தெரிவிக்கவில்லை. மாறாக அக சடங்குகள் என்று சொல்லப்படும் மேற்கூறிய எட்டு நற்பண்புகள் தான் கட்டாயமானவை.

புற சடங்குகளின் உண்மையான அர்த்தங் களை உணர்ந்து, அகசடங்குகளைக் கடைப் பிடித்து, எளிமையான முறையில், தானம் மற் றும் தர்மத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மேற்கொள்ளப்படும் சடங்கு தான் சாலச் சிறப்புடையதாகும்.

திருமணம், குழந்தைக்குப் பெயர்சூட்டுதல், தலைமுடி நீக்குதல், காது குத்துதல் மற்றும் இறுதிச்சடங்கு போன்ற ஐந்து சடங்குகளை தற்போது பெரும்பாலான இந்துக்கள் மேற்கொள் கின்றனர். காலச்சுழற்சியில் மற்ற சில சடங்குகள் அரிதாகி விட்டன.

“எவனொருவன் புற சடங்குகளை மட்டுமே மேற்கொண்டு எட்டு அக சடங்குகளையும்மேற் கொள்ளாமல் இருக்கிறானோ அவன் இறைவ னோடு ஒன்றாகக் கலப்பதில்லை. அவன்மேற் கொண்ட புறசடங்குகள் அர்த்தமற்றுப்போகின் றன.

ஒருசில புற சடங்குகளை மட்டுமேமேற்கொண் டிருந்தாலும் எட்டு அக சடங்குகளையும் மேற் கொண்டிருப்பவன் நிச்சயமாக இறைவனோடு சேர்கிறான்” என்று கௌதமர் தர்மசூத்திரம் (8:23) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒருமுகம் பக்தர்களுக்கு - மறுமுகம் சனிபகவானுக்கு

# சனிதோஷம் தீர்த்துவைக்கும் போகர் உருவாக்கிய நவபாஷண பைரவர்

சிவகங்கை மாவட்டம் பெரிச்சிகோவில் என்ற ஊரில் அமைந்துள்ளது, சுகந்தவனேஸ்வரர்திருக் கோவில்.

மூலவர் பெயர் சுகந்தவனேஸ்வரர், உற்சவரின் திருநாமம் சோமாஸ்கந்தர் என்பதாகும். அம் பாளின் திருநாமம் சமீபவல்லி.


இந்த ஆலயத்தில் வன்னி மரம் தல விருட்ச மாக இருக்கிறது. இங்குள்ள பைரவர் தன்னுடைய எட்டு கரங்களிலும் ஆயுதங்கள் மற்றும் கபால மாலை ஏந்தி காட்சி தருகிறார்.


இந்தபைரவரின் பொதுவான வடிவம், பழனி யில் பாலதண்டாயுதபாணியாக முருகனைப் போலவே உள்ளது, அவர் ஒரு ஈட்டியை ஏந்தியபடி சித்தரிக்கப்படுகிறார். பைரவருக்கான இந்த சன்னதி தனித்தனியாக உள்ளது, அதன் சொந்த விமானம் உள்ளது, இது அசாதாரணமானது, ஆனால் இந்த கோவிலில் பைரவரின் முக்கியத்துவத்தையும் குறிக்கிறது.



அவருக்கு அருகில் மூன்று பேர் வணங்கிய நிலையில் உள்ளனர். அதோடு பைரவரின் நாய் வாகனத்தைப் பிடித்தபடி, பாலதேவர் அருள்கிறார்.

பைரவர் ஒரு காலத்தில் சனீஸ்வரனின் வாத நோயைக் குணப்படுத்தினார், எனவே சனியின்






குருவாகக் கருதப் படுகிறார். சனி ஒரு தனி சன்னதியில் (எனவே ஒதை சனீஸ்வரன் என்று அழைக்கப்படுகிறது) ஒரு வன்னி மரத்தின் கீழ் (இது மிகவும் அரி தானது), தனது குருவை நோக்கி இருக்கிறார், இது சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

பைரவர் எட்டு கைகளுடன் சித்தரிக்கப்படுகிறார், ஒவ்வொன்றும் ஒரு ஆயுதத்தை ஏந்தியபடி, மண்டை ஓடுகளால் ஆன மாலையை அணிந்துள்ளார். ஒரு கை இரத்தம் சொட்ட சொட்ட சொட்ட சொட்ட சொட்ட சொட்ட ஒரு தலையைக் கொண்டுள்ளது, அதை அவரது வாகனமான நாயால் சுமந்து செல்கிறது.

பவுர்ணமி தோறும் மாலை வேளையில் இந்த பைரவருக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன. காசி பைரவர் தனிச் சன்னிதியில் வீற்றிருக்கிறார்.

இந்த சிலை நவபாஷாணத்தால் ஆனது என்றும், இதனை போகர் சித்தர் செய்ததாகவும் சொல்கிறார்கள்.

மேலும் பழனியில் உள்ள நவபாஷாண முருகன் சிலையை செய்வதற்கு முன்பாகவே, இந்த பைரவர் சிலையை போகர் செய்ததாகவும் செவிவழிச் செய்தி ஒன்று உள்ளது. இந்த நவபாஷாண பைரவரின் மீது அதிர்வுகள் அதிகம் என்பதால், இவருக்கு அணிவிக்கப்படும் மலர் மாலைகள், படைக்கப்படும் வடை மாலை உள்ளிட்ட நைவேத்தியங்கள் எதுவும் பக்தர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

சன்னிதியின் கூரை மீது போடப்படும் வடைகளை, பறவைகள் கூட சாப்பிடுவதில்லை. பைரவருக்கு அபிஷேகிக்கப்படும் தீர்த்தம் கூட, பக்தர்கள் தொட முடியாதபடி கோவிலுக்கு வெளியே விழுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இந்த பைரவருக்கு இரண்டு முகங்கள் உண்டு என்கிறார்கள்.

பின்புற முகத்தை மனிதர்களால் காண முடியாது. அந்த முகத்தால், வன்னி மரத்தின் அடியில் வீற்றிருக்கும் சனீஸ்வரருக்கு மட்டும் காட்சி தருவதாக ஐதீகம்.

இவரை ‘ஆண்டபிள்ளை நாயனார்’ என்றும் அழைக்கிறார்கள். இவரை வழிபாடு செய்தால் சனி தோஷ நிவர்த்தி, பித்ரு சாபம், ஸ்திரீ தோஷம், சகல பாபம், நீண்டகால நோய்கள் நீங்கும். அஷ்டமா சித்திகள் கிடைக்கும்.

தொடர்பு எண்: 94866 71544; 97863 67380

# தமிழகப் பெண்களுக்கு இவ்வளவு ஞானமா? வியந்த ராமானுஜர்

# திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியம்

தமிழகத்தில் ஒருசில நபர்கள், இவர் அல்லது அவர் இல்லையென்றால் பெண் விடுதலை இல்லை, பெண் சுதந்திரம் இல்லை, பெண் அடிமைத்தனத்தில்தான் இருந்திருப்பாள் என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி உளறித்தள்ளிக் கொண்டு தமிழக வருவாயில் வயிறை வளர்த்துக் கொண்டிருப்பார்கள் வெளிநாட்டு கைகூலிகள்.

அக்காலத்தில் தென்னிந்திய பெண்கள், இன்றைய தமிழக பெண்களைப் பார்த்து ராமானுஜரே வியந்துள்ளார்.

அந்தவகையில் சாதாரண மோர் விற்கும் ஒரு பெண்ணின் ஞானத்தை வியந்து அந்தப் பெண் கூறிய வார்த்தைகளுக்கு மரியாதை செய் யும் விதமான அதை சரித்திரமாக மாற்றியுள்ளார் ராமாஜர்.

அந்த சரித்திரத்தை திருக்கோளூர் பெண் பிள்ளை ரகசியம் என்றே கூறி அந்தப் பெண்ணின் ஞானத்திற்கு மதிப்பளித்துள்ளார்.

இதுபோல பெண்களை தொன்று தொட்டு போற்றி வளர்த்திருக்கிறது இந்து மதம். அந்த வகையில், வீணர்கள் புலம்பலை தள்ளிவைத்து, ராமானுஜர் கூறிய பெண்பிள்ளை ரகசியத்தை பற்றி பார்ப்போம்.

ரகசியம் ஏதும் இல்லை. சாதாரண ஒரு மோர்/தயிர் விற்கும் அம்மையார் வைணவ ஆச்சார்யார் ஸ்ரீ ராமானுஜரிடம் தெரிவித்த 81



ஆன்மிகமலர்.காம்

கருத்துக்கள் தான் இந்த ரகசியம்.

இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருத்தலம் திருக்கோளூர். 108 வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. தாமிரபரணிப் படுகையில் உள்ள நவ திருப்பதிகளிலும் ஒன்று. பன்னிரு ஆழ்வார்களில் மதுரகவி ஆழ்வாரின் ஜென்மஸ்தலம். திருக்கோளூர் என்றாலே 'தேடிப் புகும் ஊர்' என்கிறார்கள் ஆச்சார்யார்கள்.

அத்தகைய இந்த ஊருக்கு ராமானுஜர் வரும் ஓர் அதிகாலை வேளையில், மோர் விற்கும் அம்மையார் ஒருவர் வியாபாரத்திற்காக ஊரை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார். அதைக் கண்ணுற்ற ராமானுஜர், 'புகும் ஊருக்கு நாங்கள் வரும் போது நீங்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறீர்களே' என்று கேட்கிறார்.

அதற்கு, ராமாயணமும், மகாபாரதமும், பாகவதமும், ஆழ்வார்கள் வரலாறும் தெரிந்த அந்த அம்மையார், வெகு இயல்பாக, 'அழைத்து வருகிறேன் என்றேனோ அக்குரூரரைப் போலே', 'அகல் ஒழித்து விட்டேனோ விதுரரைப் போலே' எனத் தொடங்கி 'துறைவேறு செய்தேனோ பகவரைப் போலே' என முடியும் 81 விஷயங்களைக் கூறி, 'அப்பேர்ப்பட்ட நபர் நான் அல்ல, எனவே வெளியேறிக் கொண்டிருக்கிறேன்' என்று பாண்டித்யமாக பதில் அளிக்கிறார்.

அந்த 81 வாக்கியங்களில் அவர் வைணவத்தைச் சாறாகப் பிழிந்து தருகிறார். அதைக் கேட்ட ராமானுஜர், சாதாரண தயிர் விற்கும் பெண்மணிக்கே இந்த ஞானம் இருக்கும் எனில் நிச்சயம் இது புக வேண்டிய ஊர்தான் என அம்மையாரைப் பணிகிறார். பின்னாளில் அந்த அம்மையாரும் ராமானுஜரின் சீடராகிறார்.

இவர் கூறிய 81 வாசகங்கள் அதாவது 'திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியம்' நமக்கு வைணவத்தை மட்டும் பாமரப் பெண் களும் கூட இந்த நாட்டில் மேதைகளாகத்தான் இருந்திருக்கிறார்கள் என்பதையும் உணர்த்துகிறது.

அந்த 81 வாக்கியங்கள்....

1.அழைத்து வருகிறேன் என்றோனோ அக்ரூரரைப் போலே!
2.அகமொழித்து விட்டேனோ விதுரரைப் போலே!
3.தேகத்தை விட்டேனோ ரிஷி பதினியைப் போலே!
4. தசமுகனைச் செற்றேனோபிராட்டியைப் போலே!
5. பிணமெழுப்பி விட்டேனோ தொண்டை மானைப் போலே!
6.பிணவிருந்திட்டேனோ கண்டா கர்ணனைப் போலே!
7. தாய்கோலம் செய்தேனோ அனுசூயையைப் போலே!
8. தந்தை எங்கே என்றேனோ துருவனைப் போலே!
9. மூன்றெழுத்து சொன்னேனோ க்ஷத்ரபந்து வைப் போலே!
10. முதலடியை பெற்றேனோ அகலிகையைப் போலே!
11. பிஞ்சாய்ப் பழுத்தேனோ ஆண்டாளைப் போலே!
12. எம்பெருமான் என்றேனோ பட்டர்பிரானைப் போலே!
13. ஆராய்ந்து விட்டேனோ திருமழிசையார் போலே!
14. அவன் சிறியனென்றேனோ அழ்வாரைப் போலே!
15. ஏதேனும் என்றேனோ குலசேகரரைப்போலே!
16. யான் சத்யம் என்றேனோ அழ்வாரைப் போலே!
17. அடையாளம் சொன்னேனோ கபந்தனைப் போலே!
18. அந்தரங்கம் சொன்னேனோ திரிஜடையைப் போலே!
19. அவன் தெய்வம் என்றேனோ மண்டோதரி யைப் போலே!
20. அஹம் வேத்மி என்றேனோ விஸ்வாமித் திரரைப் போலே!
21. தேவுமற்றறியேனோ மதுரகவியாரைப்போலே
22. தெய்வத்தை பெற்றேனோ தேவகியைப் போலே!
23. ஆழிமறை என்றேனோ வசுதேவரைப்போலே!
24. ஆயனை(னாய்) வளர்த்தேனோ யசோதை யைப் போலே!
25. அநுயாத்திரை செய்தேனோ அணிலங்க ளைப் போலே!
26. அவல் பொரியை ஈந்தேனோ குசேலரைப் போலே!
27. ஆயுதங்கள் ஈந்தேனோ அகஸ்தியரைப் போலே!
28. அந்தரங்கம் புக்கேனோ சஞ்சயனைப்போலே!
29. கர்மத்தால் பெற்றேனோ ஜநகரைப் போலே!
30. கடித்து அவனைக் கண்டேனோ திருமங்க யாரைப் போலே!
31. குடை முதலானதானேனோ ஆனந்தாழ்வான் போலே!
32. கொண்டு திரிந்தேனோ திருவடியைப்போலே!
33. இளைப்பு விடாய் தீர்த்தேனோ நம்பாடுவான் போலே!
34. இடைக்கழியில் கண்டேனோ முதலாழ்வார் களைப் போலே!
35. இருமன்னரைப் பெற்றேனோ வால்மீகரைப் போலே!
36. இருமாலை ஈந்தேனோ தொண்டரடிப்பொடி யார் போலே!
37. அவனுரைக்க பெற்றேனோ திருக்கசியார் போலே!
38. அவன்மேனி ஆனேனோ திருப்பாணரைப் போலே!
39. அனுப்பி வையுமேன்றேனோ வசிஷ்டரைப் போலே!
40. அடி வாங்கினேனோ கொங்கில் பிராட்டியைப் போலே!

ஆன்மிகமலர் .காம்

41. மண்பூவை இட்டேனோ குரவ நம்பியைப் போலே!
42. மூலமென்றழைத்தேனோ கஜராஜனைப் போலே!
43. பூசக் கொடுத்தேனோ கூனியைப் போலே!
44. பூவைக் கொடுத்தேனோ மாலாகாரரைப் போலே!
45. வைத்தவிடத்து இருந்தேனோ பரதரைப் போலே!
46. வழி அடிமை செய்தேனோ இலக்குவணனைப் போலே!
47. அக்கரைக்கே விட்டேனோ குகப்பெருமாளைப் போலே!
48. அரக்கனுடன் பொருதேனோ பெரியவுடயாரைப் போலே!
49. இக்கரைக்கே செற்றேனோ விபீஷணனைப் போலே!
50. இனியதென்று வைத்தேனோ சபரியைப் போலே!
51. இங்கும் உண்டென்றேனோ பிரஹலாதனைப் போலே!
52. இங்கில்லை என்றேனோ திதிபாண்டனைப் போலே!
53. காட்டுக்குப் போனேனோ பெருமாளைப் போலே!
54. கண்டுவந்தேன் என்றேனோ திருவடியைப் போலே!
55. இருகையும் விட்டேனோ திரௌபதியைப் போலே!
56. இங்குபால் பொங்கும் என்றேனோ வடுகனம் பியைப் போலே!
57. இருமிடறு பிடித்தேனோ செல்வப் பிள்ளையைப் போலே!
58. நில்லென்று(னப்) பெற்றேனோ இடையற்றூர் நம்பியைப் போலே!
59. நெடுந்தூரம் போனேனோ நாதமுனியைப் போலே!
60. அவன் போனான் என்றேனோ மாருதியாண் டான் போலே!
61. அவன் வேண்டாம் என்றேனோ அழ்வானைப் போலே!
62. அத்வைதம் வென்றேனோ எம்பெருமானாரைப் போலே!
63. அருளாழங் கண்டேனோ நல்லானைப் போலே!
64. அனந்தபுரம் புக்கேனோ ஆளவந்தாரைப் போலே!
65. ஆரியனைப் பிரிந்தேனோ தெய்வவாரியாண் டானைப் போலே!
66. அந்தாதி சொன்னேனோ அமுதனாரைப் போலே!
67. அனுகூலம் சொன்னேனோ மால்ய்வானைப் போலே!
68. கள்வனிவன் என்றேனோ லோககுருவைப் போலே!
69. கடலோசை என்றேனோ பெரியநம்பியைப் போலே!
70. சுற்றிக்கிடந்தேனோ திருமாலையாண்டான் போலே!
71. சூலுறவு கொண்டேனோ திருக்கோட்டியூரார் போலே!
72. உயிராய பெற்றேனோ ஊமையைப் போலே!
73. உடம்பை வெறுத்தேனோ திருனறையூரார் போலே!
74. என்னைப்போல் என்றேனோ உபரிசரனைப் போலே!
75. யான் சிறியன் என்றேனோ திருமலைநம்பி யைப் போலே!
76. நீரில் குதித்தேனோ கணப்புரதாளைப்போலே!
77. நீரோருகம் கொண்டேனோ காசிசிங்கனைப் போலே!
78. வாக்கினால் வென்றேனோ பட்டரைப் போலே!
79. வாயிற் கையிட்டேனோ எம்பாரைப் போலே!
80. தோள் காட்டி வந்தேனோ பட்டரைப் போலே!
81. துறை வேறு செய்தேனோ பகவரைப் போலே!

இதுவே கோளூர் பெண்பிள்ளாய் இரகசியம் ஆகும்!!!



ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
e-magazine aanmeegamalar.com

# கிருத்தி வாசேஸ்வரராக மாறிய கஜாசுரன் உடல்



## கிருத்தி வாசேஸ்வரர்

சிவபெருமான் ரத்னேஷ்வரின்புகழை பார்வதி தேவிக்கு விவரித்துக் கொண் டிருந்தார். துல்லியமாக அந்த நேரத்தில் மகிஷாசுரனின் மகன் கஜாசுரன் ஆக்ரோஷ மாக பல்வேறு சிவனடியார்களை அடித்துக் கொன்றான். அவன் காலடிகள் தரையைத் தொட்ட இடமெல்லாம் நிலநடுக்கம் போன்ற அதிர்வுகள் ஏற்பட்டன.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்

அவனது பிரம்மாண்டமான கைகள் அனைத்து மரங்களையும் வேரோடு பிடுங்கி விட்டன. மேலும் அவனது மூச்சுத்திணறல் கடலில் பெரும் அலைகளை ஏற்படுத்தியது. தனியாக இருந்தால், கஜாசுரன் உலகில் அழிவை உருவாக்கியிருப்பான்.

சிவபெருமான் காசி. புண்ய க்ஷேத்திரத்தில் எந்த விதமான இடையூறுகளையும் விரும்ப வில்லை. கஜாசுரன் வேகத்தில் சிவ பெரு மானை நெருங்கியதும், சிவபெருமான் தன் திரிசூலத்தால் அவனைத் துளைத்து வானில் உயர்த்தினார். இதனால் அந்த அரக்கன் உயிரிழந்தான்.

இறப்பதற்கு முன் கஜாசுரன் சிவபெரு மானிடம், தான் சிவபெருமானின் கைகளால் மரணத்தை எதிர்கொண்டதில் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகவும். இது உண்மையில் தனக்கு ஒரு விதத்தில் உள்ள பேரின்பம் என்றும் கூறினார். எல்லா உயிர்களும் ஒரு நாள் அல்லது இன்னொரு நாள் இறக்க வேண்டும். அத்தகைய மரணம்



காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



அனைவருக்கும் வரமாக இருக்க வேண்டும் என்று அவர் பிரார்த்தனை செய்தார். அவர் இறந்த பிறகு, அவரது தோல் என்றென்றும் சிவபெருமானை அலங்கரிக்க வேண்டும் என்றும், அவர் (கஜாசுரன்) சிவபெருமானுடன் தொடர்ந்து தொடர்பு கொண்ட திருப்தியைப் பெற வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

அதற்கு சிவபெருமான் சம்மதித்தார். மேலும், கஜாசுரன் காசி என்ற அவிமுக்த க்ஷேத்திரத்தில் மரணமடைந்ததாகவும். அவனது உடல் அந்த இடத்தில் துல்லியமாக ஒரு பெரிய சிவலிங்கத்தின் வடிவத்தை அடையும் என்றும் கூறினார். இந்த லிங்கம் கிருத்தி வாசேஸ்வரர் என்று அழைக்கப்படும். கிருத்தி வாசேஸ்வரர் காசியில் உள்ள எந்த சிவலிங்கத்தையும் விட மிகப் பெரிய லிங்கமாக இருப்பார். மனித குலத்தின் நலனுக்காக சிவபெருமான் தானும் தனது குடும்பத்தினரும் எப்போதும் கிருத்தி வாசேஸ்வரர் லிங்கத்தில் இருப்போம் என்று கூறினார். பகவான்.

கிருத்தி வாசேஸ்வரர் லிங்கத்தை பூஜித்தால் ஏழு கோடி மஹா ருத்திரம் ஜபித்தத்தின் பலன் கிடைக்கும்.

பலவித பூஜைகள் மற்றும் நல்ல/புண்ணிய செயல்களைச் செய்வதன் மூலம் முந்தைய பிறவிகளிலும், நிகழ்காலப் பிறவிகளிலும் செய்த பாவங்கள் அனைத்தும் கழுவப் படுகின்றன. ஆனால் கிருத்தி வாசேஸ்வரரை தரிசனம் செய்தாலே பக்தனின் அனைத்து பாவங்களும் நீங்கும்.

பிரம்ம வைவர்த்த புராணத்தின் படி, கிருத்தி வாசேஸ்வரர் காசி வாசிகளின் (தெய்வீக வாழ்க்கையை ஏற்றுக்கொண்ட காசியில் வசிப்பவர்கள்) வாழ்க்கையை பலனடையச் செய்து இந்த கோவிலில்

பிரார்த்தனை செய்யும் பக்தர்களுக்கு மோட்சத்தை அளிக்கிறார். கூர்ம புராணத்



தின் கூற்றுப்படி, ஒரு பக்தன் ஆயிரம்பிறவி களுக்குப் பிறகும் மோட்சத்தை அடை கிறானோ இல்லையோ, கிருத்தி வாசேஸ் வரரின் ஆசியுடன், பக்தன் நிச்சய மாக மோட்சத்தை அடைந்து முக்தி பெறுகி றான்.

காசி காண்டத்தில் உள்ள மற்ற இடங்களில், பார்வதி தேவி காசியில் வழிபடப்படும் லிங்கங்களைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்பினாள். அவை முக்தி அளிக்கும் திறன் கொண்டவை. சிவபெரு மான் பார்வதி தேவியிடம் காசியில் கோடிக் கணக்கான லிங்கங்கள் இருப்பதாக கூறி னார் (காசி காண்டம். அத்தியாயம் 73) அவற்றில் பல சுயம்பு லிங்கங்கள் மற்றும் பல வேத சடங்குகளை கடைபிடித்த பிறகு பக்தர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை.

மேற்கூறிய லிங்கங்களில், பதினான்கு முக்கிய லிங்கங்கள் உள்ளன. அத்தகைய லிங்கங்களின் பெயரை உச்சரிப்பதன் மூலம், பக்தன் தனது அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். அத்தகைய லிங்கங்களில் நான்காவது கிருத்தி வாசேஸ்வரர் லிங்கம்.

e-magazine
aanmeegamalar.com

இடைக்காலத்தில் பல முகலாய ஆட்சியாளர்கள் பல்வேறு கோவில்களை அழித்தார்கள். அழிக்கப்பட்ட காசியின் முக்கியமான கோயில்களில் மூன்று முக்கியமானவை, அதாவது விஸ்வேஸ்வரர் கோயில், கிருத்தி வாசேஸ்வரர் கோயில் மற்றும் பிந்து மாதவ் கோயில் (விஷ்ணு). கிருத்தி வாசேஸ்வரர் கோவில், காலபைரவர் கோவிலுக்குவடக்கே அமைந்து, அவுரங்கசிப்பால் அழிக்கப்பட்டது. கோயிலுக்கு அருகில் ஹன்ஸ் தீர்த்தம் இருந்தது. மக்கள் ஹன்ஸ் (அன்னம்)தீர்த்தத்தில் குளிப்பதும், கிருத்தி வாசேஸ்வரர் கோவிலில் பிரார்த்தனை செய்வதும் புனிதமாக கருதப்பட்டது.

ஆன்மிகமலர்

இக்கோயில் இடிக்கப்பட்ட பின்னர், நீண்ட இடைவெளிக்குப் பிறகு ராஜா பத்னிமலால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போதுள்ள கோயில் பழமை வாய்ந்த கோயிலுக்கு தெற்கே உள்ள இடத்தில்கட்டப்பட்டு, தற்போது புதிதாகக் கட்டப்பட்ட கோயிலில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே குறிப்பிட வேண்டும். அசல் கிருத்தி வாசேஸ்வரர் ஒரு பெரிய கோவில் வளாகத்தில் இருந்தார். மேற்கூறியபடிகோவிலை இடித்த பிறகு ஒரு மசூதி கட்டப்பட்டது மற்றும் துல்லியமாக கிருத்தி வாசேஸ்வரர் லிங்கம் இருந்த இடத்தில் ஒரு நீரூற்று இருந்தது.

பல ஆண்டுகளுக்கு முன்பு வரை, சிவராத்திரி நாட்களில், லிங்கம் ஒருமுறை நின்ற இடத்தில் உள்ள நீரூற்றில் பக்தர்கள் பிரார்த்தனை செய்தனர். சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு, அந்த இடத்தில் மீண்டும் ஒரு பெரிய லிங்கம் நிறுவப்பட்டது. மேற்கண்ட தலத்திலும் பக்தர்கள் எளிய வழிபாடுகள் செய்து வருகின்றனர்.

பூர்ணிமாவுக்குப் பிறகு (அமாவாசைக்கு ஒரு நாள் முன்பு) அனைத்து சதுர்த்தசி நாட்களும் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. மேற்கூறிய நாளில் விரதம் அனுஷ்டித்து, கிருத்தி வாசேஸ்வரர் கோவிலில் பூஜை செய்பவர் மிக உயர்ந்த மகிழ்ச்சியை அடைகிறார். மாக மாதம் (ஜன. 21 பிப். 20), அமா வாசைக்குப் பிறகு சதுர்த்தசி நாள் (பதிநான்காம் நாள்) மற்றும் சைத்ர மாதம் (மார்ச் ஏப்ரல்) பூர்ணிமா நாட்களில் காசி காண்டம் பூஜை/அர்ச்சனைக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. இதுபோன்ற நாட்களில் பூஜை செய்வது பக்தர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த புனித லிங்கம் லிங்க புராணம். அத்தியாயம் 1 மற்றும் 8 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. பக்தன் பல பாவங் களைச் செய்திருக்கலாம். ஆனால் கிருத்திவாசேஸ்வரரை வழிபட்டால் அவனுடைய பாவங்கள் அனைத்தும் நீங்கும் என்று புராணம் கூறுகிறது. முற்பிறவியில் செய்த பாவங்கள் கூட கிருத்தி வாசேஸ்வரரை பூஜை செய்வதன் மூலம் நீங்கும். கருத யுகத்தில் த்ரயம்பக் என்றும், த்ரேதா யுகத்தில் கிருத்தி வாசேஸ்வரரை என்றும், துவாபர் யுகத்தில் மஹேஸ்வரர் என்றும். கலியுகத்தில் ஹஸ்தி பாலேஸ்வரர் என்றும் இறைவன் அறியப் பட்டான் என்று இந்தப் புராணம் கூறுகிறது.

இக்கோயிலில் ருத்ரம் பாராயணம் செய்வது மிகவும் சிறப்பானது. பால்குன் கிருஷ்ண சதுர்த்தசி அன்று கிருத்தி வாசேஸ்வரரை கோவிலில் செய்யப்படும் பூஜை, மோட்சத்தை அருளும் மற்றும் பக்தர்களின் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றும். (லிங்க புராணம்). லிங்க புராணம், அத்தியாயம் 15 (வாரணாசி மகாத்ம்யா) மிக முக்கியமான ஆறு லிங்கங்கள் இருப்பதாகவும், அவற்றில் ஒன்றுகிருதி வசேஸ்வரர் என்றும் கூறுகிறது.

கோவிலின் இடம்

கிருத்தி வாசேஸ்வரரை கோவில் ஹர் திரத் குளத்திற்கு மேற்கே அமைந்துள்ளது. பண்டைய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஹன்ஸ் தீர்த்தம் இப்போது ஹர் திரத் என்று அழைக்கப்படுகிறது. மேலும் ஒரு காலத்தில் குளம் இருந்த இடத்தில் இப்போது பல கட்டிடங்கள் வந்துள்ளன. பிரசித்தி பெற்ற பிஷ்வேஸ்வரர்கஞ்ச் என்ற இடத்தில் இருந்து இந்த கோயிலை அணுகலாம். இது ஒரு பெரிய மண்டி (சந்தை இடம்) மற்றும் சைக்கிள் ரிக்ஷாவில் கோயிலுக்கு பயணம் செய்வது வசதியானது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

# இயற்கையாக உருவான கல்கருடன் உருவம்

## விருதுநகர் மாவட்டம் எரிச்சநத்தம் கோபால் சாமி கோவில் ஓர் அதிசயம்

திருமங்கலம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு இடைப்பட்ட இடத்தில் ஒரு குன்றின் மேல் அமைந்துள்ளது கோபால்சாமி குடவரைக் கோவில். திருமங்கலத் திலிருந்து தெற்கே 20 கிலோமீட்டர் தொலைவில், மோதகம் என்ற இடத்தில் இக்கோவில் உள்ளது.

சுமார் 900 முதல் 1200 வருடங்களுக்கு முன்பு ஒரு குன்றின் மேல் கட்டப்பட்ட குடவரைக் கோவில் என்று அறியப்படுகிறது, சரியானவருடங் கள் தெரியவில்லை ஆனால் மிகப் பழமையான கோவில்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

முழுக்க முழுக்க கருங்கல்லால் ஆன மண்டபங்கள், அவற்றைத் தாங்கும் பிரமாண்ட தூண்கள், அதில் திருமாலின் பல்வேறு அவதாரங்களை விளக்கும் சிற்பங்கள் என அனைத்தையும் ஒரே ஒரு செங்குத்துப் பாறை போன்ற ஒரு குன்றில், குன்றைக் குடைந்து அடிவாரத்தில் அரங்கநாதருக்கு ஒரு குடவரைக் கோயிலும், குன்றின் மேல் கோபால் சாமிக்கு ஒரு கோவில் என இரு வகையானக் கோயில்களைக் அக்காலத்தில் கட்டியிருக்கிறார்கள்.

வழக்கம்போல பாறைகளை எப்படி எதை வைத்துப் பிளந்தார்கள்? எப்படி சிற்பங்களை செதுக்கினார்கள்? எப்படி கீழிருந்து மேலே கொண்டு சென்றார்கள் போன்ற. வியப்புகளை யெல்லாம் தாண்டி, அதிசயிக்க வைக்கும் ஒரு விசயம் இயற்கையின் துணை கொண்டு அமைக்கப்பட்ட காற்றோட்டம்.

குன்றின் மேல் கோபால் சாமி சந்நிதி மிகக் குறுகியது. மிக அதிகம் புளுக்கம் கொண்ட இடம்.

அந்த இடத்தில் குளுகுளு காற்றோட்டத்தை அதுவும் 900 வருடங்களுக்கு முன்னர் இயற்கையான



முறையில் உருவாக்கியிருப்பது “காற்றோட்ட அறிவியலின் உச்சம் “

நம் வியப்பிற்கெல்லாம் சிகரம் வைத்தார்போல் இருப்பது அறிவியலால்கூட. விளக்க முடியாமல் இருப்பது. அந்த செங்குத்துக் குன்று இரண்டாகப் பிரிந்து, அதில் கருடன் கை கூப்பி வணங்கியது போன்ற ஒரு சிலை மாதிரியான அமைப்புத் தெரியும்.

உண்மையில் இது சிலையுமல்ல! யாரும் செதுக்கியதும் அல்ல! (கீழே உள்ளபடத் தில் வட்டமிட்டு காட்டப்பட்டுள்ளது, அருகில் சென்றால் எப்படி தெரியும் என்பதை அறிவிப்பு குறியிட்டு காட்டப்பட்டுள்ளது).

கருடன் தன் முதுகில் கோபால் சாமியை வைத்துக் கொண்டு வணங்கியது போல, தானாகவே காற்றின் போக்கால் இயற்கையாக அமைந்தப் பாறை. இதை இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்ட இந்தக் கோணத்தில் பார்த்தால் மட்டுமே தெரியும்.

கோவிலின் தல விருட்சமாக புளியமரம் உள்ளது. இந்த புளியமரம் ஒரு அதிசய மரமாக பார்க்கப்படுகிறது. இது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் காய் காய்க்கும் என்று கூறுகின்றனர்.


இந்த மலை தங்கம் போலவே ஜொலிப்புடன் காணப்படுவதால் இதனை தங்கமலை என்றும் அழைக்கிறார்கள். கருங்கல்லால் ஆன மண்டபங்கள், அவற்றைத் தாங்கும் பிரம்மாண்டமான தூண்கள், திருமாலின் பல்வேறு அவதாரங்களை விளக்கும் அற்புதமான சிற்பங்கள் என அனைத்தும் ஒரே ஒரு செங்குத்து பாறை போன்ற குன்றில் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீதேவி பூதேவி தாயாருடன் பிரம்மா, ஆஞ்சநேயர், கருடன் சூழ அனந்த சயன கோலத்தில் ரங்கநாதர் காட்சி தருகிறார். மலை மேல் சத்யபாமா ருக்மணி சமேத கோபாலசாமி காட்சி தருகிறார். மலை உச்சியில் உள்ள கோபால்சாமி கோவிலில் ஒரே கல்லை குடைந்து உருவாக்கப்பட்ட ஜன்னல் போன்ற அமைப்பில் இருந்து காற்று மிக அழகாக வீசுகிறது.

இந்த குடைவரை கோவில் மலை உச்சியில் உள்ள மண்டபத்திலிருந்து பார்த்தால் தென்மேற்கில் ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜகோபுரத்தை காண முடிகிறது.



இக்கோவிலில் சித்ரா பௌர்ணமி, ஏகாதசி, புரட்டாசியில் கருட சேவை, நவராத்திரி, திருக்கார்த்திகையின் போது மலை உச்சியில் தீபமேற்றுதல் போன்ற திருவிழாக்கள் நடைபெறுகின்றன. கோவில் காலை 8:30 மணி முதல் ஒரு மணி வரை திறந்திருக்கும்.



# அரசனின் உயிரை காத்து பக்தனுக்கு பார்வை தந்த

# திருச்செந்தூர் முருகன்

e-magazine
aanmeegamalar.com

குன்று, மலைகளில் குடியிருக்கும் முருகப்பெருமான் கடற்கரையோரம் மலைக்குன்றில் குடியிருக்கும் ஒரே ஸ்தலம் திருச்செந்தூர்.

முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாவதாகக் கருதப்படும் ஒரு மிகச் சிறப்புமிக்க தலமாகவும் திருச்செந்தூர் திகழ்கிறது. அசுரர்களை அழிக்கும் திருச்செந்தூர் முருகன் மக்களின் மனதை சூரையாடும் அசுரர்களை அழித்து, தனது பக்தர்களின் மனதிற்கு நிம்மதியும், ஆனந்த வாழ்வையும் தருவதாகவும் கூறப்படுகிறது.

அசுரனை அழித்து மக்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தை தரும் நிகழ்வாகவே திருச்செந்தூரில் நடைபெறும் சூரசம்ஹாரம் திகழ்கிறது. இந்த சூரசம்ஹார நிகழ்வில் கலந்து கொள்ளும் போது, பக்தர்களை சூழந்த இருள் அகலுவதாகவும். திருச்செந்தூர் முருகன் கோவிலில் பல அற்புதங்கள் நிகழ்வதாகவும், பக்தர்கள் பலர் தங்கள் வாழ்க்கையில் முருகனின் கருணையால் நல்ல மாற்றங்களை கண்டதாகவும் கூறுகின்றனர்.


திருச்செந்தூர் முருகன் கோவில் ஒரு ஆன்மீகத் தலமாக மட்டுமல்ல, பக்தர்களுக்கு ஆறுதல் அளிக்கும் ஒரு இடமாகவும் விளங்குகிறது. அங்கு சென்று முருகனை தரிசிப்பவர்கள், வாழ்வில் நல்ல மாற்றங்கள் ஏற்படுவதாக நம்புகின்றனர்.

இதுபோன்ற ஒரு சம்பவத்தை வரலாற்று நிகழ்வாகவே கூறப்படுகிறது.

காசியபர் எனும் அந்தணர் கல்வி கேள்விகளில் சிறந்தவர். என்ன காரணத்தாலோ, அவருக்கு பார்வை குறை ஏற்பட்டு, ஒரு கட்டத்தில், முழுவதுமாக தெரியாமல் போனது. பார்வை கிடைக்க வேண்டி, திருச்செந்தூர் முருகப் பெருமானை சரணடைந்தார்.







அதிகாலையில் எழுந்து, கடல் மற்றும் நாழிக் கிணற்றில் நீராடுவதும், அவன் நாமத்தை பாராயணம் செய்வதுமாக திருச்செந்தூரான் சன்னிதியே கதியென்று கிடந்தார்.

பிரார்த்தனையின் பலனாக, திடீரென்று ஒரு நாள், அவருக்கு மங்கலாகப் பார்வை தெரிய த் துவங்கியது. மகிழ்ச்சியில் கூத்தாடினாலு ம், ‘திருச்செந்தூரா. உன் அருளால், என் பார்வை முழுமையாகத் தெரியாதா, வேண்டி, கண்ணீர் விட்டார்.

ஆன்மிகமலர்

அப்போது, கோவிலுக்கு வந்த பக்தர் ஒருவர் அருளாடி “காசியபா, என் பக்தனும், இந்நாட்டு அரசனுமான ஜகவீரன் இங்கு வருகிறான்; அந்த உத்தம பக்தனின் கை உன் மீது பட்டதும், உனக் குப் பார்வை முழுமையாக தெரியும்..” என்றார்.

அதைக் கேட்டதும், அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டாலும், அதேசமயம் கலக்கமாகவும் இருந்தது. காரணம், பார்வையற்றவர்களை அரசர் பார்க்க கூடாது என்பது அக்கால சம்பிரதாயம்.

இந்த மனப் போராட்டத்தில் காசியபர் அமர்ந் திருக்க சிறிது நேரத்தில், கோவிலுக்கு வந்தார் அரசர் ஜகவீரன். அருள் வாக்கு பற்றிய தகவல் அவரிடம் எடுத்துரைக்கப்பட்டது. ஆனால், அரசரோ, “நான் அரசன் என்பதால், அதிகாரம் வேண்டுமானால் என்னிடம் இருக்கலாமே தவிர, அற்புதம் செய்யக் கூடிய அளவிற்கெல்லாம் என்னிடம் சக்தி கிடையாது...” என்று சொல்லி, சாமி தரிசனம்

e-magazine
aanmeegamalar.com



e-magazine
aanmeegamalar.com

செய்வதில் முனைப்பாக இருந்தார்.

அன்றிரவு, அரசர் ஜகவீரன், கோவிலிலேயே தங்க வேண்டி இருந்ததால், சண்முக விலாச மண்டபத்தில் வந்து அமர்ந்தார். திடீரென்று அவருக்கு என்ன தோன்றியதோ, "அந்த பார்வை யற்றவரை அழைத்து வாருங்கள்.." என்றார்.

அரசு பணியாளர்கள் சம்பிரதாயத்தை எடுத்து சொல்லி மறுத்த போதும், பிடிவாதமாக அவரை அழைத்து வரச் சொன்னார் அரசர்.

காசியபரைப் பார்த்ததும், மனம் கசிந்த அரசர், "நீங்கள் நாளைக் காலை நீராடி, முருகன்சன்னிதிக்கு வாருங்கள்; அவன் திருவருள்படி நடக்கட்டும்..." என்றார்.

மறுநாள் காலையில், "முருகா, உன் சொற்படி இவருக்குப் பார்வை வராவிட்டால், நான், என் தலையை அறுத்துக் கொண்டு இறப்பேன்..." என்று கூறி, விபூதியை எடுத்து காசியபரின் கண்களில் ஊதி, அவர் கண்களை கைகளால் மெல்ல வருடினார் அரசர். அடுத்த வினாடி, காசியபருக்குப்பார்வை திரும்பியது. அனைவரும் அரசரை வாழ்த்த, அவரோ, "முருகன் எனக்களித்த உயிர்ப்பிச்சை இது; ஆறுமுகனின் அருள் இதை விடப் பெரியது." எனக் கூறி, அமைதியாக வெளியேறினார்.

அரசரின் கரங்களால் காசியபரின் துயர் தீர்த்த ஆறுமுகன், நம் துயரையும், எவர் மூலமாகவா வது களைவார்.

அந்த ஜகவீரன் எனும் அந்த அரசரின் மகன் தான் வீரபாண்டிய கட்ட பொம்மன.



## வரப்போகும் தீமைகள் வராமல் தடுக்க உதவும்

# ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

e-magazine
aanmeegamalar.com



சாந்தி என்றால் அமைதி எனவும் பொருள்படும். மந்திரங்கள் உச்சாடனம் செய்து முடிக்கும் போது இறுதியாக “ஓம் சாந்தி:, சாந்தி:, சாந்தி:” என்று முடிப்பார்கள்.

இதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கின்றது. நம்முடைய நூல்களைப் புரட்டிப் பார்த்தால் அதற்கான அரிய தத்துவம் நமக்கு புரியும்.

ஒரு மனிதன் அவன் வாழ்க்கையில் மூன்று விதமான துன்பங்களில் இருந்து நீங்க வேண்டும். இதைப் பற்றி சாங்கிய யோக சூத்திரம்முதல் வரியில் கூறுகின்றது. அந்த மூவகை துன்பங்கள்:

1. அதிதைவீகம்
(நம் சக்திக்கு மீறிய ஒன்றால் ஏற்படுவது)

2. அதிபௌதீகம்
(பௌதீக பொருட்களால் ஏற்படுவது)

3. அதியாத்மிகம்
(நம்மால் ஏற்படுவது)

**அதிதைவீகம்:**

அதிதைவீகம் என்பது நம்மால் கட்டுப்படுத்த முடியாத, நம் சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றால்

வரும் துன்பமாகும். நம் சக்திக்கு மீறிய ஒன்று தான் இயற்கை.

வெள்ளம், புயல், நிலநடுக்கம், ஆழிப்பேரலை, எரிமலை வெடிப்பு போன்றவை இயற்கையிட மிருந்து வரும் துன்பங்கள் ஆகும்.

இந்த துன்பங்களை தடுத்து நிறுத்தும் சக்தி சாமானிய மனிதர்களுக்குக் கிடையாது.

## அதிபௌதீகம்:

அதிபௌதீகம் என்பது உலகத்தில் இருக்கும் ஜடப்பொருட்கள், உயிரினங்கள் போன்றவற்றி லிருந்து வரும் துன்பங்கள் ஆகும்.

இவற்றுள் மனிதன், மிருகம், தாவரம், உயிரற் றப் பொருள் ஆகியவை அடங்கும்.

உதாரணமாக: ஒருவர் நம்மை வாய்ச்சொல்லால் துன்பப்படுத்துதல், ஆயுதத்தால் தாக்குதல், கையால் தாக்குதல்.

பாம்பு கடி, தேள்கடி, டிங்கு, மலேரியா, வனவிலங்கு தாக்குதல், விஷசெடி தீண்டல், கட்டி டங்கள் சரிந்து விழுதல், மின்சாரம் தாக்குதல், சாலை விபத்து போன்றவை.

## அதியாத்மிகம்:

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

அதியாத்மிகம் என்பது நமக்கு நாமே ஏற் படுத்திக் கொள்ளும் துன்பமாகும். இதுவே மிகவும் ஆபத்தானது என சொல்லப்படுகின்றது.

இந்த வகையான துன்பத்திற்கு நாம் தான் முழு பொறுப்பு. நம்மை நாமே துன்புறுத்திக் கொள்வதை இரண்டு வகையாகப் பகுக்கலாம்.

உடலால் – புகைப்பிடித்தல், மது அருந்துதல், ஆரோக்கியமற்ற உணவு உண்ணுதல் போன்ற செயல்களால் நம் உடலை நாமே துன்புறுத்திக் கொள்ளுதல்

மனத்தால் – தேவையற்ற எண்ணங்களைக் கொண்டிருத்தல், முறையற்ற விஷயங்களை நினைத்துக் கொண்டிருத்தல், கோபம்,வெறுப்பு, பொறாமை போன்ற தீயகுணங்களைக் கொண் டிருத்தல்

## இதற்கான தீர்வு:

பதஞ்சலி யோக சூத்திரத்தில் துன்பங்களைப் பற்றியும் அதற்கான தீர்வுகள் பற்றியும் தெளிவாக விளக்குகின்றார்.

துன்பங்கள் என்பவை கிலேஷங்கள் என்று சொல்லப்படுகின்றன. நம்முடைய சுய இயல்பைப் பற்றி நாம் அறியாமல், அறியாமையில் திளைத்திருப்பதால் தான் புத்திமலுங்கி நம்மை



நாமே துன்பப்படுத்திக் கொள்கிறோம் என பதஞ் சலி கூறுகின்றார்.

எனினும் எதிர்காலத்தின் துன்பங்களைத் தடுக்கும் அளவுக்கு நமக்கு ஆற்றல் உள்ளது என்பதை "ஹேயம் துக்ஹம் அனாகதம்" (2:16) இல் குறிப்பிடுகின்றார்.

இந்த மூன்று நிலையிலுமான துன்பங்கள் நீங்கி எங்கும் அமைதி நிலவிடவே, ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என மூன்று முறை செப்பிக்கப்படுகின்றது.

அமைதியான இடத்தில், தூய்மையான பக்தி கொண்ட உள்ளத்தோடு அமர்ந்து ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டு ஓம் சாந்தி என செப்பித்து வந்தால் ஒரு மனிதன் இந்த மூன்று வகையான துன்பங்களில் இருந்தும் நீங்கிடலாம்.

# சிவனின் 5 மயானங்களும் 5 மயான ஸ்தலங்களும்



சிவபெருமான், அம்பலவாணனாய் தில்லை முதற்கொண்டு ஒருசில திருத்தலங்களில் நடனம் புரிந்து அருள் பாலிப்பவர் என்று கூறப்படுகிறது.

ஆனால், அவர் திருக் கோவில்களில் மட்டுமல்ல, மனித உடல்களை இறுதியில் அடங்கும் சுடுகாடு என்ற மயானங்களிலும் சுடலைப் பொடி என்ற சாம்பலை பூசி நடனமாடி வாழும் மனிதர்கள் முதற்கொண்டு இறப்பு வரை அனைத்திற்கும் தானே காரணம் என்பதை சொல்லாமல் சொல்லி அருள் பாலிக்கிறார்.

மேலும், ஒருசில இடங்களில் சிவனைச் "சுடுகாட்டுச் சாமி" என்று கூறுவதும் உண்டு.

அந்தச் சுடுகாட்டுச் சாமியின் அடிமுடி காண முடியாமல் அனைத்துலகமும் ஸ்தம்பித்த வரலாறும் உண்டு. அந்த வகையில் சிவபெருமான் ஐந்து வகை மயானத்தில் குடிகொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

அவை :

1. கச்சி மயானம்
2. கடவூர் மயானம்
3. நாவலூர் மயானம்
4. காழி மயானம்
5. வீழி மயானம் ஆகியவை.

ஐந்து மயானங்கள் என்று சொல்லப்படும். இத்தலங்களில் ....

### கச்சி மயானம்

முதலாவதாக இடம் பெறுவது கச்சி மயானம் எனும் மயானலிங்கேஸ்வரர் கோயில். இது காஞ்சிபுரத்தில் உள்ளது

### கடவூர் மயானம்

இரண்டாவதாக கடவூர் மயானம் என்பது திருக்கடையூரில் உள்ளது.

### நாவலூர் மயானம்

மூன்றாவதாக இடம் பெறும் மயானத்தலம் நாவலூர் மயானம். இது திருநாவலூரில் அமைந்துள்ளது.

ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

இவை மூன்றும் தேவாரப்பாடல் பெற்ற தலங் கள் ஆகும்.

### காழி மயானம்

நான்காவதாக, சீகாழியிலிருந்து திருமுல்லை வாசல் செல்லும் சாலையில் 2 கி.மீட்டர் தூரத்தில் அக்னீஸ்வரர் கோயில் உள்ளது; இதுவே காழி மயானம் என்று அறியப்படுகிறது.

### வீழி மயானம்

திருவீழிமிழலைக்குப் பக்கத்தில் திருமெய்ஞ் ஞானம் என்றொரு ஊருள்ளது; இதுவே வீழி மயானம் என்று அறியப்படும் 5 ஆவது மயான தல மாகும்.

மனித வாழ்வு இறுதி பெறும் போது, அந்த ஆன்மா இறைவனைச் சென்று சேரும் என்பதை நம்புகிறோம்.

மனித உடம்பு இறுதியில் சென்று சேரும் இடம் சுடலை எனப்படும் மயானம். அந்த மயானத்தில் இருந்து மக்களை ஆட்கொள்கிறார் சிவன் என்ற தத்துவத்தின் விளக்கமாக இந்த 5 (ஐந்து) மயானத் திருத்தலங்கள் விளங்குகின்ற என்று கூறுவது மிகையாகாது.



e-magazine
aanmeegamalar.com

## ஆஞ்சநேயர் வழிபாட்டினால் கிடைக்கும் பலன்கள்

வால்மீகி ராமாயணத்தை படிக்கும் போது, ஆஞ்சநேயருக்காகச் சொல்லும் புகழ்மிக்க ஸ்லோகம் ஒன்றுண்டு.

“புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம் அரோகதா!
அஜாட்யம் வாக் படுத்வம் கீச ஹநூமத் ஸ்மரணாத் பவேத்..”

ஆஞ்சநேயர் வழிபாட்டினால் ஒருவருக்கு என்னென்ன பலன் கிடைக்கும் என்பதை இந்த ஸ்லோகம் பட்டியல் இடுகிறது.

நல்ல புத்தி, தேகபலம், புகழ், சாந்தகுணம், யாருக்கும் அஞ்சாத நெஞ்சுறுதி, ஆரோக் கியம், உற்சாகம், வாக்குவன்மை ஆகிய எட்டும் ஆஞ்சநேயரை தியானிப்பதால் உண்டாகும்.

இந்த எட்டையும் எட்டுவதற்கு ஆஞ்சநேயரை வணங்குங்கள்.



ஆன்மிகமலர் மெயில் புக்




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









## வராக பிள்ளையார், கரும்பாயிர விநாயகர்

# ஒரே பிள்ளையார் இரு பெயர்கள் இரண்டுவித புராண நிகழ்வு

கும்பகோணத்தை கோவில் நகரம் என்று கூறுவார்கள், இந்நகரத்தில் பல்வேறு வரலாற்று சம்பவங்கள் சாட்சியாக சொல்லப்படுகிறது.

அந்த வகையில் ஒவ்வொரு தெய்வங்களின் சன்னதிகளும் ஒருவரலாற்று புராணத்தை பின்புலமாக கொண்டு விளங்குகிறது.


அப்படிப்பட்ட கும்பகோணத்தில் விநாயகருக்கு மட்டும் பல்வேறு சன்னதிகள் உள்ளது.

சுந்தரமூர்த்தி விநாயகர் கோயில், கரும்பாயிர விநாயகர் கோயில், பகவத் விநாயகர் கோயில், உச்சிப்பிள்ளையார் கோயில், ஜெகந்நாதப்பிள்ளையார் கோயில், கற்பக விநாயகர் கோயில், சித்தி விநாயகர் கோயில், பேட்டைத்தெரு விநாயகர் கோயில், நினைத்த காரியம் முடித்த விநாயகர் கோயில், மும்மூர்த்தி விநாயகர் கோயில், பொய்யாத விநாயகர் கோயில், சீராட்டும் விநாயகர் கோயில், இலுப்பையடி விநாயகர் கோயில் என்று விநாயகருக்கு உகந்த கோவில்கள் இருந்தாலும்,

பூமியை காக்க அருள்புரிந்த விநாயகர் ஆலயம் மிகச் சிறப்பு வாய்ந்தது,

ஆதிகாலத்தில் கும்பகோணம் வராஹபுரி என்ற பெயரால் அழைக்கப்பட்டது. ஒரு யுகாந் தரத்தில், துராத்மாவாகிய அசுரன் பூமியை பாதாள உலகத்துக்குக் கொண்டு சென்று விட்டான்.

பூமியை மீட்க மகாவிஷ்ணு வராஹ வடிவெடுத்து புறப்படத் தயாரானபோது, முதன் முதற் கடவுளான விநாயகரை வேண்டிக்கொண்டே பூமாதேவியை மீட்டருளினார். இந்த நிகழ்வு நடைபெற்ற இடம் கும்பகோணம், மகாவிஷ்ணு வழிபட்ட பிள்ளையார்






வராஹப் பிள்ளையார் என்ற திருநாமத்துடன் அழைக்கப்பட்டார்.

இதே வராகப் பிள்ளையாருக்கு இன்னுமொரு வரலாறும் உண்டு.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பான புராண நிகழ்வாகவும் இது கூறப்பட்டு வருகிறது.

ஒருமுறை, வணிகன் ஒருவன் மாட்டு வண்டி யில் கட்டுக்கட்டாகக் கரும்புகளை ஏற்றிக்கொ ண்டு பயணித்தான். இவ்வூர் எல்லைப் பகுதி யைக் கடக்கும்போது அவனுக்கு உறக்கம் வர வே, அருகிலுள்ள திருக்குளத்தின் பக்கத்தில் வண்டியை நிறுத்திவிட்டுக் குளத்து நீரில் முக ம் கழுவி கொண்டு கரைக்குத் திரும்பினான்.




அப்போது சிறுவன் ஒருவன் வண்டிக்கு அரு கில் நின்றுகொண்டு வண்டியைப் பார்த்தபடி யே இருந்ததை கண்டான் வணிகன். எனக்கு பசி வயிற்றைக் கிள்ளுகிறது; ஒரு கரும்பைக் கொடேன் என்று வணிகனிடம் அந்தச் சிறுவன் கேட்டான்.

கரும்பு கொடுக்க வணிகனுக்கு மனமில்லை. எனவே, “ஊஹூம், தரமுடியாது” என்று மறுத்து விட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தான். சிறுவன் வண்டி ஓட்டத்தோடு தொடர்ந்து ஓடிக்கொண்டே, கெஞ்சலும் கொஞ்சலுமாக மீண்டும் மீண்டும் கரும்பு கேட்டுக் கொண்டே வந்தான்.

தெருவில் போய்க் கொண்டிருந்த சிலர் இந்நிகழ்வைப் பார்த்துவிட்டு, “ஏனப்பா, அந்தக் குழந்தை கேக்குது இல்லே. ஒண்ணு ஒடிச்சுக் கொடுத்தா குறைஞ்சா போயிடுவே. பார்க்கி றதுக்குப் பிள்ளையாராட்டம் எப்படியிருக்குபார்த் தியா...” என சிறுவனைப் பார்த்துக் கூறினார்கள்.

அப்படியும் வணிகனுக்கு மனம் கனியவில் லை. இவையெல்லாம் கொஞ்சம் வேற மாதிரி கரும்பு. நாணல் குச்சிகள் மாதிரி. இதை ஒடிச்சு உறிஞ்சினால் உப்புகரிக்கும். ஆலை யில்

கொண்டு இயந்திரத்தில் பிழிந்தால் தான் இனிக்கும். என்று சிறுவனுக்காக சிபாரிசு செய்தவர்களிடம் பொய் சொன் னான்.

நல்ல சாறு தரும் கரும்புகளை வண்டி முழுவ தும் வைத்துக்கொண்டு நாணல் குச்சிகள் என்றா சொல்கிறாய். அவையெல்லாம் உனக்குப் பயன் படாத தாகவே ஆகட்டும் என்று கூறி விட்டு, வண்டியைத் தொடர்ந்து சென்ற சிறுவன் அருகிலுள்ள ஆலயத்துக்குள் நுழைந்து மறைந்துவிட்டான்.

மறுநாள், அந்த வண்டிக்காரன் சர்க் கரை ஆலையை நோக்கி வண்டியைச் செலுத்தி னான். அங்கு ஆலை கூலி ஆள் கரும்புக் கட்டுகளின் மேல் கைவைத்துப் பார்த்துவிட்டு கோபம் அடைந்து, “ஏனப்பா, இந்த மாதிரி ஏமாத்து வேலை செய்யறே, வெறும் நாணல் குச்சிகளைக் கட்டிவந்து கரும்புன்னு பொய் சொல்றே, உனக் கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?..” என்று கேட்டான்.

அதிர்ச்சியடைந்த வணிகன் வண்டி யைச் சென்று பார்க்க, எல்லாம் நாணல் குச்சிகளா கவே இருந்தது. எதுவுமே புரியாமல் தவித்தவ ன், பின் தன் வீட்டுக்கு வந்து அப்படியே படுத்து உறங்கிவிட்டான்.




அந்த வணிகனின் கனவில் கரும்பு கேட்ட சிறுவன் தோன்றி, “நான்தான் பிள்ளையார். நல்ல கரும்புகளை வெறும் நாணல் குச்சிகள் என்று என்னிடமே பொய் சொன்னாய். இப்போது அது உனக்குப் பயன்படாமலே போய் விட்டது. வணிகனாகிய உனக்கு தர்ம சிந்தனை துளியும் இல்லையே...” என்று இகழ்ச்சியாகக் கூறினான்.

இதன்பின்னரே, பிள்ளையாரே சிறுவனாக வந்து தன்னிடம் விளையாடியிருக்கிறார் என் பதைப் புரிந்துகொண்ட வணிகன், “சுவாமி, என் னைச் சோதித்தது தாங்கள்தானா? என் தவறை மன்னித்து அருளுங்கள்.. “என்று சொல்லி கோயிலுக்குச் சென்றான்.

கோபம் விலகிய விநாயகர், நாணல் குச்சி களை மீண்டும் கரும்புகளாக மாற்றினார்.அன்று முதல் இந்தப் பிள்ளையார் கரும்பாயிரம்பிள்ளை யார் என்று பக்தர்களால் அன்புடன் அழைக்கப் படுகிறார்.

கும்பகோணம் தல வரலாறுக்குக் காரண மாகவும் பிரதான சிவாலயமாகவும் விளங்கும் கும்பேஸ்வரர் கோயிலுக்கு வரும் பக்தர்கள், அருகில் அமைந்துள்ள இந்தப் பிள்ளையாரின் பெருமையறிந்து தரிசித்துச் செல்வது வழக்கமாக உள்ளது.

குடந்தை நகரத்தின் மூத்த பிள்ளையான கரும்பாயிரம் பிள்ளையார் பக்தர்களின் வாழ்வை இனிப்பாக மாற்றிடுவார் என்பதில் ஐயமில்லை. கும்பகோணம் செல்பவர்கள், அவசியம் இந்தப் பிள்ளையாரையும் தரிசித்து வருகிறார்கள்.

பக்தர்கள் தங்களது பிரார்த்தனைகள் நிறைவேற இங்குள்ள விநாயகரை வழிபட்டுச் செல்கின்றனர். பக்தர்கள் விநாயகருக்கு அருகம் புல் மாலை சாற்றி, சிதறுகாய் உடைத்தும், கரும்பை காணிக் கையாகவும் செலுத்துகின்றனர்.

சற்றே பழைமையான ஆலயம். ஆகமவிதி களின்படி நாள் தவறாமல் வழிபாடுகள்நடைபெறு கின்றன. விநாயகருக்குரிய பண்டிகை நாட்களில் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
185 க்கும்
மேற்பட்ட
இதழ்களை

aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.



# பிதுர் தோஷம் போக்கும் பாஸ்கரேஸ்வரர்





"சூரியன்" உலக உயிர்கள் பிறப்பதற்குக்காரண மாக விளங்குபவர் இவரே. அதனால் இவருக்கு ஆத்மகாரகன் என்று பெயர். அது மட்டுமல்ல, நீத்தார் என்று சொல்லப்படும் நமது இறந்த முன்னோர்களுக்கும் இவரே காரகர் ஆவார்.

ஒருவரது ஜாதகத்தில் சூரியனின் நிலையைக் கொண்டு அவரது முன்னோர்கள் செய்த பாவ புண்ணியங்களையும், அவர்களின் பலம் மற்றும் பலவீனத்தையும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

அப்படிப்பட்ட சூரியன்... பரிதி, பாஸ்கரன், இரவி, தினகரன், கதிரவன், பகலவன் எனப் பல பெயர்களாலும் போற்றப்படுகின்றார். அந்த சூரியனுக்கு உகந்த தெய்வமாக, அதிபதியாக விளங்குபவர் சிவபெருமான்.

சிவனை மதியாது, அவருக்கு எதிராக நடத்தப் பட்ட தக்ஷயாகத்தில் பங்குபெற்ற சூரியன், குன்ம நோயால் கடுந்துன்பத்திற்கு ஆளானார். சிவ அபராதத்தினால் உழன்ற சூரியதேவர், இப்பூவுலகில் 16 சிவத்தலங்களில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, ஆத்மார்த்தமாக வழிபட்டார். அவற்றுள் பஞ்ச (ஐந்து) பாஸ்கர க்ஷேத்திரங்களுல் ஒன்றாகத் திகழ்கிறது பருதியப்பர் கோவில். ஆதியில் அரசவனமாகத் திகழ்ந்த இத்தலம் பாஸ்கர க்ஷேத்ரம் என்றும், பரிதிநியமம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. பிதுர்தோஷ நிவர்த்தி தலமாகப் போற்றப்படும் இந்த திருத்தலம் சூரியன் நெறிமுறையோடு வழிபட்ட முதன்மையானத் தலம் என்றே சொல்லலாம்.

சூரியனின் பரிபூரண வழிபாட்டால் மகிழ்ந்த பரமன், சூரியன் முன் தோன்றி, வேண்டும் வரம் கேட்கின்றார். அதற்கு சூரியன்....அஷ்ட மூர்த்திகளுள் ஒருவனாகத் தான் இடம்பெற வேண்டும் என்றும், ஆகம தீக்ஷா வழிபாட்டில் தனக்கும் பூஜை நடைபெற வேண்டும் என்றும் வரம் வேண்டினார்.

அவ்வாறே வரமருளிய சிவபெருமான்....."



இத்தலம் கயிலைப்போல் பிரகாசித்து, ஊழிக்காலத்திலும் அழியாது நிலைபெற்றிடவும், இங்கு தீர்த்த நீராடி எம்மை வழிபடுவோர் சகல நன்மைகளையும் அடைவார்" என மேலும் அருள்புரிந்து மறைந்தார்.

புறாவுக்காக தன் சதையையே தந்த சூரியகுலத் தோன்றலான சிபி சக்கரவர்த்தி, சில காலம் இங்கு தங்கியிருந்தார். அப்போது சிபி மன்னனின் குதிரைப் பாகன், குதிரைக்கு புல் அரிந்துக் கொண்டிருந்தபோது, அவனது வாள் பூமியில் புதையுண்டிருந்த சிவலிங்கத்தின் மீது பட்டு, இரத்தம் பீறிட்டது. இதையறிந்த சிபி சக்கரவர்த்தி இரத்தம் வெளிப்பட்ட இடத்தைச் சுற்றிலும் இருந்த செடி கொடிகளைக் களைந்திட சிவலிங்கம் தென்பட்டது. அந்த லிங்கமே சூரியன் ஸ்தாபித்து வழிபட்ட லிங்கமாகும். பின்னர் அங்கு ஆலயம் எழுப்பி, நித்திய நைமித்திய பூஜைகளை நடத்தினார் சிபி மன்னர். தனது மூதாதையர் கால லிங்கத்தை உலகிற்கு தெரிவித்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

சாபத்தின் காரணமாக பிரம்ம சர்மா என்ற வேதியன் பருந்தாகவும், அவனது மனைவிசுசீலை கிளியாகவும் மாறினர். இத்தலத்தின் மகிமைகளை கேள்வியுற்று, இங்கு வந்து பாஸ்கர லிங்கத்தை வழிபட்டு, சாப விமோசனம் அடைந்து, சுய உருவம் அடைந்தனர்.

தனதத்தன் என்ற வணிகன் தனது அனைத்து செல்வங்களையும் இழந்து, வறுமை நிலையை அடைந்தான். பின்னர், இத்தல மகிமையை அறிந்து, இத்தலமடைந்து, புனித நீராடி, பரிதீசரை மனமுருகி வழிபட்டான். ஈசனருளால் இழந்த செல்வங்களை மீண்டும் பெற்று மகிழ்ந்தான்.

சேர மன்னனின் அமைச்சர் மகனான பத்ம லோசனன் என்பவன் தீய வழியில் சென்று, பஞ்ச மகாபாதகங்களைப் புரிந்தான். இதன் விளைவாகத் தீராத கருங்குஷ்ட நோய் பீடித்து துன்புற்றான். பின், தனது தவறுகளை உணர்ந்து, மனம் வருந்தி, பருதியப்பர் கோவிலுக்கு வந்து, தீர்த்தத்தில் நீராடி, சூரியன் வழிபட்ட இத்தல ஈசனை வணங்கி, வழிபட்டு நோய் நீங்கப் பெற்றான்.

உலகோரைப் புனிதப்படுத்தும் அன்னை கங்காதேவி பிரம்மதேவனின் ஆலோசனைப்படி கடக ராசியில் குரு இணைந்திருக்கும் ஒரு வருட காலம் சூரிய புஷ்கரணியில் நீராடி, இங்கு பரமனை வழிபட்டு, பாவங்கள் தீர்ந்து, பரமனருள் பெற்றுள்ளாள். அதோடு, ஸ்ரீ மார்கண்டேயரும்இந்த பெருமானைப் பூஜித்து புண்ணியம் பெற்றுள்ளார்.

திருஞானசம்பந்தரால் தேவாரம் பாடப்பெற்ற இத்தலம் காவிரித் தென்கரை தேவாரத் தலங்கள் 128 இல் 101 வது திருத்தலமாக வணங்கப்படுகின்றது. வள்ளல் இராமலிங்கரும் இத்தலத்தைப் போற்றியுள்ளார். கீழ்வேங்கை நாட்டில் அமைந்த ஊரிது.

கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரத்துடன் மூடுதளமாக அமையப்பெற்றுள்ளது.

கோவிலைச் சுற்றிலும் நாற்புறமும் தேரோடும் வீதிகள். ஆலயத்தின் நேர் எதிரே சூரியன் உண்டுபண்ணிய சூரிய தீர்த்தமும், மேற்கில் சந்திரன் உற்பத்தி செய்த சந்திர தீர்த்தமும்,

e-magazine
aanmeegamalar.com

மற்றும் தேவர்களால் உண்டான தேவ தீர்த்தமும் அமைந்துள்ளன.

உள்ளே.....முதலில் கணபதி தரிசனம். பின் பலிபீடம், கொடிமரம் மற்றும் நந்தியம்பெருமான்.

இது வெளிப் பிராகாரம். வெளிப் பிராகாரச் சுற்றில் வசந்த மண்டபமும், அதன் அருகில் தெற்கு நோக்கியவாறு அம்பாள் சன்னதியும் அமைந்துள்ளது. கருவறையுள் கருணை மழைப் பொழிகின்றாள் அன்னை ஸ்ரீ மங்களாம்பிகை.

வடகிழக்கு மூலையில் யாகசாலையும், தென் கிழக்கில் மடப்பள்ளியும், அதனையடுத்து ஆலய தீர்த்தக் கிணறும் அமைந்துள்ளன. கன்னிமூலை எனப்படும் நிருர்தியில் கணபதி சன்னிதியும், மேற்கில் வள்ளி தெய்வானையுடனான கந்தன் சன்னிதியும், வாயு மூலையில் கஜலட்சுமி சன்னி தியும் அமைந்துள்ளன. மேற்குத் திருமாளிகைப் பத்தியில் திருமால், அனுமன் சிலாரூபங்கள் காணப்படுகின்றன.

கோஷ்ட தெய்வங்களோடு கிழக்குத் திரு மாளிகைப்பத்தியில் பைரவர், தனி சனீஸ்வரர், நவகிரகங்கள் மற்றும் சந்திரன் காணப் படுகின்றனர். வழக்கத்திற்கு மாறாக த்வனிஸ் (சிவ) சண்டிகேஸ்வரரோடு, தேஜஸ் (சூரியன்) சண்டரும் அபூர்வமாகக் காட்சி தருகின்றார்.

கொடிமரத்தின் நேராக மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என்கிற அமைப்பில் ஸ்வாமி சன்னிதி அமைந்துள்ளது. மகாமண்டபத்தில் நட ராஜர் சபையுள்ளது.

கருவறையுள் பிரம்மாண்டமான லிங்கத் திருமேனி கொண்டு பேரருள் புரிகின்றார்ஸ்ரீபாஸ்க ரேஸ்வரர். தன்னை நாடி வந்து வழிபடுபவரது சகல விதமான தோஷங்களையும் போக்கி, நல்லருள் புரிந்திட காத்திருக்கின்றார். அற்புத தரிசனம். பெரியதொரு நாகாபரணராக ஒளி வீசுகின்றார். பரிதியப்பர், இரவீஸ்வரர் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றார். கருவறையுள்ளே மூல வருக்கு அருகில் சுரங்க வழி ஒன்று உள்ளது. இந்த சுரங்க வழி தஞ்சை பெரிய கோவில் வரை செல்வதாகவும் கூறுகின்றனர். மூலவருக்கு நேரே நந்தியின் முன்புறம் சூரியன் நின்ற நிலையில் சிவபெருமானை வழிபடுகின்றார். பிற திருத்தலங்களில் இதைக் காணஇய லாது.

இத்தலத்தின் விருக்ஷமாகமரங்க ளுக்கெல்லாம் இராஜாவான அரச மரம் திகழ்கிறது. இந்து சமய அறநிலை யத்துறைக்கு உட்பட்ட இவ்வாலயம் தஞ்சை மாவட்டம், கீழ்வேங்கை நாடார் களுக்கு சொந்தமானதாகும்.

இங்கு பங்குனி உத்திர பிரம் மோற்சவம் பத்து நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறுகின்றது. சித்திரையில் அக்ஷயதிருதி யை, மாசியில் ரதசப்தமி. இவற்றோடுஏனையசிவா லய விசேடங்களும் சிறப்புறநடத்தப்படுகின் றன.

பிரதி வருடம் பங்குனி மாதம் 19 ஆம் தேதி காலை 6 மணியளவில் சூரியனின் ஒளிக் கதிர்கள் சிவனின் மீது படரும் சூரியபூஜை விழா விசேஷமாக நடக்கின்றது.

தினமும் நான்கு கால பூஜைகள் நடந்திடும் இவ்வாலயம், தினமும் காலை 6 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8.30 மணி வரையும் திறந்திருக்கும்.

ஜாதக ரீதியாக பிதுர்காரகனான சூரியன்.... சனி இராகு கேது மாந்தி ஆகிய பாப கிரகங்களுடன் சேர்ந்தோ, அந்த பாப கிரகங் களின் பார்வை பட்டோ இருந்தாலும், சூரியன் அசுப ஸ்தானங்களில் மறைந்தாலும், அந்த ஜாதக ருக்கோ அல்லது அந்த பரம்பரையினருக்கோ பிதுர் தோஷம் ஏற்படும்.

அப்படிப்பட்ட நிலையில் அந்த ஜாதகர், பிரதி தமிழ் மாதம் வளர்பிறையில் வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் சூரிய சந்திர தீர்த்தங்களில் நீராடி, பஞ்சமூர்த்திகள் மற்றும் சூரியனுக்கும் சேர்த்து அபிஷேகம் செய்து, புது வஸ்திரம் சாற்றி, தயிர் சாதம் நிவேதனம் செய்து, பிராமணர்களுக்கு முடிந்த தானங்களைச் செய்ய அருள் கிட்டும்.

சித்தபிரம்மை, மன உளைச்சல் போன்றவற்றுக் கும் இத்தல வழிபாடு சிறந்ததாகும். அதோடு.... கார்த்திகை, உத்திரம், உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும், சிம்ம லக்னம் மற்றும் சிம்ம இராசியில் பிறந்தவர்களுக்கும், சூரியன் ஜாதகத்தில் ஆட்சி உச்சம் நீசம் பெற்றவர்களுக்கும், சூரிய தசை நடப்பவர்களுக்கும், பிரதி தமிழ் மாதம் முதல் தேதியில் பிறந்தவர்களுக்கும் கூட மேற்சொன்ன பிரார்த்தனை நல்ல பலனைத் தரும் என்பதில் சந்தேகமில்லை. மஹாலயத்தில் இங்கு பித்ருகடன் தீர்ப்பவர் களுக்கு போகமான வாழ்வும், சிறந்த வாரிசும், தெய்வ கடாக்ஷமும் கிடைக்கப் பெறுவர் என்பது ஐதீகம்.

இங்கு இறந்த முன்னோர்களுக்கு சூரிய தீர்த்தக்கரையில் நீத்தார் கடன் செய் வது, காசி இராமேஸ்வரத்தில் செய்த பலனைத் தரும் என்பது உறுதி.

தஞ்சாவூரிலிருந்து ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை செல்லும் வழியில் 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மேலஉளூருக்கு கிழக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.


மோ.கணேஷ்

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 185 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# ‘பாரதத்தின் நன்மைக்காக’ நொய்டா கோவில்களில் குழு பாராயணம்

e-magazine
aanmeegamalar.com



மூலாம்னாய ஸர்வக்ஞ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆணைப்படி ஸனாதன வைதீக இந்து தர்மத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மன சங்கடத்தை ஏற்படுத்தும்

சமீபத்திய நிகழ்வுகள் சரிப்படுத்த நம் பாரத தேசத்தில் உள்ள அனைத்து பக்தர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து

‘ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹ கருணாரஸ (கராவலம்ப)’ ஸ்தோத்திரத்தை பாராயணம் வாசித்தனர்.



எஸ்.வெங்கடேசன்

இது நம் நாட்டு மக்களுக்கு பாதுகாப்பை அளிக்கும். இந்த இயக்கத்தில் நமது பாரத தேசத்தின் நன்மைக்காக, ஆச்சார்யாள் அன்பு ஆணைப்படி, குழு பாராயணம், நொய்டா செக்டர் 42 சங்கர மடத்தில் மற்றும் நொய்டா செக்டர் 62 ஸ்ரீ விநாயகா ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில் பாராயணம் செய்தார்கள்

மேற்கூறிய முறையீட்டுக் கருத்தில் கொண்டு, பேராசிரியர் டாக்டர் கிருஷ்ணா சுந்தரியின் வழிகாட்டுதல்





மற்றும் மேற்பார்வையின் கீழ், பக்தர்களின் பாராயணம் நடைபெற்றது. மகா தீபாராதனையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது, வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் பானகம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்தப் பாராயணத்தை எஸ். சுரேஷ், ர ராமசேஷன், மற்றும் திருமதி பிரியா ராஜு ஐயர் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

# நொய்டா முருகன் கோவிலுக்கு தீட்சிதர்களின் ஆன்மீக வருகை

விஜயவாடாவை சேர்ந்த ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சோமயாஜுலு, ஸ்ரீ சதாசிவ சோமயாஜுலு, மற்றும் ஸ்ரீ காசி விஸ்வநாத சோமயாஜுலு ஆகியோர் ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில், செக்டர் 62, நொய்டா வருகை தந்திருந்தினர். இந்த குழு விஜயவாடாவில் நடைபெற்ற பௌண்டரிகா யாகத்தை 34 நாட்கள் நிகழ்த்தியது. ‘பௌண்டரிகா யாகம்’ நடத்துவதன் முக்கியத்துவம் குறித்து தீட்சிதர் விளக்கினார். வேதிக் பிரச்சார் சன்ஸ்தானின் ஆஸ்தான வாத்தியார்கள் ஸ்ரீ ஸ்ரீராம் மற்றும் ஸ்ரீ ஷங்கர் அணைத்து ஏற்பாடுகளும் செய்து கொடுத்ததற்கு கோவில் நிர்வாகம் நன்றி தெரி வித்தனர்

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்: 9811161370

# முதலில் உன்னைத் தெரிந்து கொள்வதே ஒழுக்கம்

சீடன்: வளரும் மனிதன் எப்படி இருக்க வேண்டும்?

ஞானி: பேசாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதே என்று எண்ணுபவனே வளரும் மனிதன்.

சீடன்: துன்பங்கள் ஏன் பிறந்தன?

ஞானி: ஆன்மீக இறக்கைகள் வளராததால்.

சீடன்: பூஜைகளை நிறுத்தலாமா?

ஞானி: பயம் போய்விட்டால் நிறுத்து.

சீடன்: தொண்டன் என்றால் என்ன?

ஞானி: பிறருக்காக வாழ்வது.

சீடன்: வீரம் என்றால் என்ன?

ஞானி: யாரையும் எதையும் யாசிக்காத நிலை.

சீடன்: ஞானஸ்நானம் என்றால் என்ன?

ஞானி: நமக்கு தேவையானது எது என்று தெரியும் நேரம்.

சீடன்: உண்மையான மதவாதிகள் ஏன்இல்லை?

ஞானி: பிரச்சினைகளில் கௌரவம் குறுக்கிடுவதை அனுமதிப்பதால்.

சீடன்: மனிதத் தன்மை என்றால் என்ன?

ஞானி: எதிலும் நோக்கம் அதிகமாக இருப்பது.

சீடன்: தொண்டர்கள் என்பவர்கள் யார்?

ஞானி: கடமையைச் செய்தவர்கள்.

சீடன்: தொண்டில் சிறந்தது எது?

ஞானி: வழி காட்டியாகச் செய்யும் தொண்டு.

சீடன்: மனிதன் பக்தியைக் கொள்வது எப்போது?

ஞானி: தேவை என உணரும்போது.

சீடன்: இறையுணர்வு எப்பொழுது வரும்?

ஞானி: அது இயக்கமாக தானாக வளர வேண்டிய ஒன்று.

சீடன்: அதற்கு செய்ய வேண்டியது என்ன?

ஞானி: முதலில் ஒரு வழிகாட்ட குருவைத் தேடு,

சீடன்: சிந்தனையாளன் என்பவன் யார்?

ஞானி: சார்புடைய எண்ணங்களுக்கு கட்டுப்படாதவன்.

சீடன்: ஒழுக்கம் என்றால் என்ன?

ஞானி: முதலில் உன்னைத் தெரிந்து கொள்வது.

சீடன்: பக்தி மார்க்கம் எப்பொழுது தெரியும்?

ஞானி: மனம் சிரிக்கும் போது.

சீடன்: நல்ல மனிதன் யார்?

ஞானி: உள்நோக்கம் இல்லாதவன்.

சீடன்: இறைவன் மனிதனிடம் எதிர்பார்ப்பது என்ன?

ஞானி: கடவுள் மனிதர்களிடம் மொத்த அபிப்பிராயத்தையோ தனிப்பட்ட அபிப்பிராயங்களையோ எதிர்ப்பார்ப்பதில்லை.

சீடன்: மதங்கள் ஏன் தோன்றின?

ஞானி: தெய்வம் எதற்காக என்று புரிவதற்கு.

சீடன்: ஆசாரம் என்றால் என்ன?

ஞானி: கொள்கையைக் கடைப்பிடிக்கும் தன்மை.

சீடன்: முடிவு எடுப்பது எப்படி?

ஞானி: படிப்பதற்கு முன்னால் முடிவு செய்யாதே. படித்து அறிந்து முடிவு எடுப்பவன் பாதியில் ஓடிவிடுவான்.

சீடன்: வெற்றி என்பது என்ன?

ஞானி: புண்ணியத்தின் எதிரொலி.

சீடன்: உலகம் நம்மை எப் பொழுது நேசிக்கும்?

ஞானி: எல்லையில்லா தன்மையுள்நுழையும்போது.



சீடன்: திருவிழா என்றால் என்ன?

ஞானி: கடவுளும் மனிதனும் சொன்னதை நிறைவேற்றும் நேரம்

சீடன்: மதங்களுக்கு எது தேவை?

ஞானி: அடிப்படைகள் இல்லாமல் மதங்கள் தோன்றாது.

சீடன்: எந்த மதமும் உலகம் முழுதும் வியாபிக்கவில்லையே?

ஞானி: மனிதனை கடவுள் தந்திரமாகப் படைத்ததால் எந்த மதமும்

ஆன்மிகமலர் .காம்

உலகனைத்தும் வியாபிக்காது.

சீடன்: மனிதன் ஞானம் பெறுவது எப்பொழுது?

ஞானி: அறிவாற்றலின் தொடர்பை அறிந்து கொள்பவன் ஞானியாகிறான்.

சீடன்: சந்தேகங்கள் எங்கிருந்து தோன்றுகிறது?

ஞானி: பொருள்களிலிருந்து சந்தேகங்கள் தோன்றுவதில்லை. நம்மிடம்தான் தோன்றுகிறது.

சீடன்: நல்ல மனிதன் யார்?

ஞானி: நோக்கத்திற்கு மதிப்பு கொடுப்பவன்.

சீடன்: லாபமான நேரம் எது?

ஞானி: மனிதன் ஆணவமில்லாத சமயம்.

சீடன்: ஒரு விஷயத்தின் உட்பொருளை உணர்வது எப்படி?

ஞானி: அந்த விஷயத்தின் மேலுள்ள பக்தி லட்சியமாகும் சமயம்.

சீடன்: புண்ணியம் எந்த நேரம் ஏற்படுகிறது?

ஞானி: உண்மையான பொழுதுபோக்கு எது என்பதை தெரிந்து கொள்ளும் சமயம்.

சீடன்: எது நல்ல நேரம்?

ஞானி: நேரம் போகக் கூடாது. நேரம் தெரிய வேண்டும். அதுதான் நல்ல நேரம்.

சீடன்: அழிவை தவிர்ப்பது எப்படி,

ஞானி: மகான்களையும், ஞானிகளையும், ஆலயத்தையும் கண்டு உணர்வதால்.

சீடன்: பக்தன் என்பவன் யார்?

ஞானி: பயமின்மையை அடைந்தவன்.

சீடன்: வாழ்க்கை என்பது எது?

ஞானி: அச்சம் பிறக்காத நிலை.

சீடன்: கடவுள் உலகில் இருக்கிறானா?

ஞானி: உலகியல் இருப்பதாலேயே கடவுள் இருக்கிறான். சராசரி மனிதனுக்கு பொருள் இல்லாமல் கடவுளை எண்ண முடியாது.

சீடன்: மரணம் என்றால் என்ன சுவாமி?

ஞானி: ஆத்மாவின் தியானம் தான் மரணம். உயிரின் தியானம் உடலின் மரணம்.

சீடன்: பக்தி வர எளிமையான வழி எது?

ஞானி: மனம் சலனப்படாமல் கடவுளைத் தொழு. பக்தி வரும்.

சீடன்: கல்வி வர வழி எது?

ஞானி: சலனமில்லாமல் குருவைத் தொடும்போது.

சீடன்: கடவுளை அறிவது எப்படி?

ஞானி: நம் குறையை நாமே தரிசிக்கும்போது.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

# இராமானுஜரை தேடி வந்த கிருஷ்ண விக்ரகம்



வைணவத்தில் பன்னிரண்டு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருக்கோவில்கள் 108 திவ்யதேசங்கள் எனப் போற்றபடுகிறது.

பல முக்கியமான திருத்தலங்கள் அபிமான ஷேத்திரங்களாக போற்றி வணங்கபடுகிறது. இவை சுயம்புவாக, தெய்வங்களேவிரும்பி அர்ச்சா அவதாரமாக தோன்றிய இடங்களாகும்.

பல யுகங்களிலும் அவதரித்த தெய்வங்களாலும், புண்ணிய புருஷர்களாலும், ஆச்சார்யர்களாலும், மற்றும் சிறந்த பக்தர்களாலும் வணங்கப்பட்ட சக்திவாய்ந்த அபிமான ஷேத்திரங்கள் 108 உள்ளது. அதில் இன்று நாம் தரிசிக்க இருப்பது மேல்கோட்டை ஸ்ரீயோக நரசிம்மர்ஆலயம் மற்றும் திருநாராயணபுரம் ஸ்ரீ செல்வ நாராயணர் ஆலயம்.

இத்திருக்கோவில் கர்நாடகா மாநிலத்தில் மாண்டியாவில், பெங்களூரிலிருந்து 160 கீ.மீ தொலைவிலும், மைசூரிலிருந்து 48 கீ.மீ தொலைவிலும், உள்ள அழகிய சிறிய கிராமத்தில் அமைந்துள்ள மிக மிக பழமையான கோவில் ஆகும்.

இத்திருக்கோவிலின் சிறப்புக்களை பற்றி அறிய நாம் பல யுகங்கள் கடந்து செல்ல வேண்டும். இத்திருத்தலம் கிருதயுகம் எனபடும் சத்ய யுகத்தில் வேதாத்ரி எனவும், திரேதா யுகத்தில் நாராயணத்ரி எனவும், துவாபர யுகத்தில் யாதவாத்ரி எனவும், கலியுகத்தில் திருநாராயணபுரம் எனவும் அறியப்படுகிறது. இத்தலத்தின் தீர்த்தம் கல்யாணி தீர்த்தம். தல விருட்சம் இலந்தை மரம். சாண்டில்ய மகரிஷியால் தட்சிண பத்ரியாக போற்றப்பட்ட ஸ்தலம்.

இங்கு இரண்டு திருக்கோவில்கள் உள்ளன. மலை மேல் அமைந்துள்ளது மேல்கோட்டை ஸ்ரீ யோக நரசிம்மர் ஆலயம். இங்கு செல்வதற்கு முன், கல்யாணி குளத்தில் இறங்கி, நீராடி அல்லது தீர்த்தத்தை புரோட்சணை செய்துக்கொண்டு, பின் மலை ஏறி நரசிம்மரை தரிசிக்க வேண்டும். கல்யாணி தீர்த்தம் எனபடும் இக்குளம் மிக பிரம்மாண்டமானது. வராக அவதாரத்தின்போது தோன்றிய குளம் என நம்பபடுகிறது. யுகபுருஷரான

ஸ்ரீ இராமானுஜர் 12 வருட காலம் தங்கியிருந்து, தீர்த்தமாடி நித்ய அனுஷ்டானங்கள் செய்து பகவானை சேவித்த இடம். அந்த குளத்தை தரிசிக்க நாம் பல புண்ணியம் செய்திருக்க வேண்டும். இக்குளத்தின் கரையில் பிந்துமாதவர், நாராயணர், லட்சுமி நரசிம்மர் மற்றும் மாருதி சன்னதிகள் உள்ளன. இக்குளத்தில் மீன்கள் அதிகம். மீன்களுக்கு உணவாக பொறி வாங்கி குளத்தில் இடலாம். இங்கிருந்து மலைக்கோவில் கோபுரம் தரிசனம் செய்து,பின் மலை ஏறலாம்.

மிகவும் செங்குத்தான, கடினமான மலைபாதை ஏற சுமார் 420 படிகள் உள்ளன. முடியாதவர்கள் 250 படிகள் வரை செல்லும் சாலையில் கார் அல்லது ஆட்டோ மூலம் சென்று விட்டு, பின் மீதம் உள்ள படிகளை ஏறித்தான் ஆக வேண்டும். மலையிலிருந்து கீழே தெரியும் கல்யாணி குளம், ஊரின் அழகை ரசித்துக் கொண்டு, கூடவே வந்து தொல்லை கொடுக்கும் குரங்குகளிடமிருந்து தப்பித்து, ராம நாமம் ஜபித்துக் கொண்டு, நாராயண நாமத்தை உச்சரித்துக் கொண்டு மலை உச்சியை அடைகிறோம்.

கோபுர தரிசனம் செய்து, இங்கு நவக்கிரகங்களுமே ஒன்பது படிகளாக உள்ளதால், இப்படி

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
e-magazine
aanmeegamalar.com


களை கடந்து சென்று, ஸ்ரீ யோக நரசிம்மரை தரிசிப்பவர்களுக்கு எந்த கிரக தோஷமும் அண்டாது என்பது நம்பிக்கை. பிராகாரம் வலம் வந்து, சன்னதியில் பிரம்மாண்டமாக யோக நிஷ்டையில் அருள் பாலிக்கும் ஸ்ரீ நரசிம்மரை தரிசிக்கும் போது மெய் சிலிர்க்கிறது. கண் பனிக்கிறது. மிக அழகான நேர்த்தியான அலங்காரம். வரிசையில் நின்று நிதானமாக சேவிக்கலாம்.

பின் வரிசையில் நின்றும் ஆசை தீர அழகியசிங்கரை தரிசிக்கலாம். பக்தர்கள் மாலை சாற்றி, அர்ச்சனை செய்கின்றனர். ஸ்ரீ நரசிம்மர் சத்ய யுகத்தில் பிரகலாதனால் வழிபடப்பட்ட திருமூர்த்தம். தனது தந்தையான இரண்யகசிபுவை நரசிம்மர் வதம் செய்ததால், பிரகலாதனுக்கு பித்ரு அத்தி தோஷம் ஏற்பட்டதாம். அந்த பாவம் நீங்க, பல காலம் பிரகலாதன் தவம் செய்த இடம். அவர் தவத்துக்கு மெச்சிய ஸ்ரீ நரசிம்மர் அவர் முன் தோன்றி, அருள் புரிந்து, அவரது பித்ரு தோஷம் நிவர்த்தயான இடம். தனக்கு காட்சி கொடுத்த அதே திருக்கோலத்தில் பக்தர்களுக்கும் அருள வேண்டும், என பிரார்த்தித்து, பிரகலாதன் கட்டியது தான் இந்த மேல்கோட்டை ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோவில். இந்த ஸ்தலத்தை தரிசிப்பது பெரும் பாக்கியம். ஸ்ரீ நரசிம்மர் தரி சனம் முடிந்து, கீழே உள்ள திருநாராயணபுரம் கோவிலை அடைகிறோம்.

இத்திருக்கோவிலின் சிறப்புக்கள் பற்றி அறிய யுகங்கள் கடக்க வேண்டும். மூலவர் திருநாரயணர் விஷ்ணுவின் அம்சம். உற்சவர் சம்பத் குமாரர் என அழைக்கப்படும் செலுவ பிள்ளை. இங்குள்ள மூலமூர்த்தம் கிருத (சத்ய) யுகத்தில் பிரம்ம தேவரால் விஷ்ணுவிடமிருந்து பெறப்பட்டதாம். பிரம்மரின் மகனான சனாதனகுமாரர் பிரதிஷ்டை செய்த தெய்வம். உற்சவ மூர்த்தியான ராம பிரியர் ஸ்ரீ இராமரால் ஆராதிக்கபட்டவர். திரேதாயகத்தில், இராம அவதாரத்தின் போது, தனது குலதெய்வமான ஸ்ரீ ரங்கநாதரை, வீபீஷணனுக்கு ஸ்ரீ ராமர் தானமாக கொடுக்கிறார். பின், தனது பூஜைக்கு என பிரம்ம லோகத்திலிருந்து பெறப்பட்டு, நித்ய ஆராதனை மூர்த்தியாக, ராமரால் அனுதினமும் பூஜிக்கப்பட்ட உற்சவர் "ராம பிரியர்" என அழைக்கபடுகிறார். ராமரின் மகனான குசனின் மகளுக்கு சீதன மாக கொடுக்கப்பட்ட இந்த விக்கிரகம், சூர்ய வம்சத்திலிருந்து, சந்திர வம்சத்திற்குவந்ததாம். துவாபரயுகத்தில், ஸ்ரீபலராமர், ஸ்ரீ கிருஷ்ணராலும், இவர் ஆராதிக்கப்பட்டதாகவும், ஸ்ரீகிருஷ்ணரால் உற்சவர் இங்கு வந்ததாகவும் நம்பிக்கை. காலபோக்கில் மண்ணில் மறைந்து போன கோவிலை மீண்டும் நிர்மாணித்தவர் கலியுகத்தில் அவதரித்த யுகபுருஷரான ஸ்ரீ இராமானுஜர்.

சோழ மன்னரின் வஞ்சக செயலால், ஸ்ரீரங்கத்தை விட்டு புறப்பட்ட ஸ்ரீ இராமானுஜர் இத்திருத்தலம் வந்த போது, இப்பகுதியை ஆண்ட, விஷ்ணுவர்த்தன் என்ற மன்னரின் மகளின் தீராத நோயை குணமாக்கினார். மன்னரின் வேண்டுதல்படி, ஸ்ரீ இராமானுஜர் சில காலம் இங்கு தங்கி இருந்தார். அவர் கனவில் தோன்றிய பெருமாள், தான் இங்கு புதர்கள் மத்தியில் இருப்பதாக தெரிவிக்க, மன்னரின் உதவியுடன், மண்ணில் புதையுண்ட கோவிலை மீட்டு எடுத்து, பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது தான் இப்போது உள்ள திருக்கோவில். இங்கு மூலவர் மட்டும் இருக்க, உற்சவ விக்கிரகம் எங்கே, என விசனப்பட்ட ஸ்ரீ இராமானுஜர் கனவில் தோன்றிய பெருமாள் தான் டில்லி பாதுஷாவின் அரண்மனையில் இருப்பதாக தெரிவித்தாராம். உற்சவ மூர்த்தியை தேடி, டில்லியை அடைந்த ஸ்ரீ இராமானுஜரை வரவேற்ற அரசர், "தனது கஜானாவில் உள்ள விக்கிரங்களில் அவர் தேடி வந்த உற்சவர் இருந்தால், எடுத்து செல்லுங்கள்", எனக் கூற விக்கிரகம் காணாமல் ஸ்ரீ இராமானுஜர் கலங்க, அவரது கனவில்தோன்றிய பெருமாள், "தான் இளவரசிக்கு மிகவும் பிடித்த மான விளையாட்டு பொம்மையாக உள்ளதாகவும், அவரை திருநாராயணபுரம் அழைத்து செல்லு மாறும்", பணிக்கிறார்.

அடுத்த நாள் அரசரை சந்தித்த ஸ்ரீ இராமா னுஜர், விக்கிரகம் இளவரசியிடம் இருப்பதாக கூற, அதைக் கேட்ட அரசர், "உங்கள் தவவலிமை யால், இளவரசி கையில் எப்போதும் உள்ள



பொம்மையை முடிந்தால், இருந்த இடத்தில் இருந்து அழைத்து, விக்கரகம் வந்தால் எடுத்து செல்லலாம்'', என கட்டளை இடுகிறார்.

உடனே ஸ்ரீ இராமானுஜர், ''என் செல்ல மகனே வாரும்'', எனும் பொருள்பட, ''வாராய்!!! என் செல்ல பிள்ளாய்!!!'' என அழைக்க, அந்த புரத்தில் இளவரசியிடம் இருந்த விக்கிரகம், சின்ன குழந்தை கண்ணனாக மாறி, தவழ்ந்து வந்து, ஸ்ரீ இராமானுஜரின் மடியில் ஏறி அமர்ந்து கொள்ள, அன்றிலிருந்து இவர் ''செல்ல பிள்ளை'', என அழைக்கப்படுகிறார். தான் கொஞ்சி விளை யாடிய கண்ணன் விக்கிரத்தை பிரிய மனமில்லாத இளவரசி, ஸ்ரீ இராமானுஜருடன் திருநாரயணபுரம் சேர்ந்து, செல்ல பிள்ளையுடனே ஐக்கியம் ஆன தாகவும், அவரே, ''பீபீ நாச்சியார்'' எனவும், மூலவர் பாதத்தில் உள்ள ''வரத நந்தினி'' எனவும் போற் றப்படுகிறார்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த திருக்கோவி லின் கோபுர தரிசனம் செய்து, துவஜஸ்தம்பம் வணங்கி, திருசன்னதியை அடைகிறோம். மேற்கு நோக்கிய சன்னதியில் அருளும் திருநாராயணர், நின்ற திருக்கோலத்தில், நான்கு திருக்கரங்களில் அபய அஸ்தம், சங்கு, சக்கரம், கதாயுதத்துடன் அருள்பாலிக்கிறார்.

ஸ்ரீ இராமானுஜரின் மனம் கவர்ந்த செல்ல பிள்ளை, ராம பிரியர், ஸ்ரீ தேவி, பூ தேவி தாயார் களுடன் அருளுகிறார். பல குடும்பங்களுக்கு திருநாராயணர் குல தெய்வம்.


பிராகாரம் வலம் வந்து தனி சன்னதியில் அருளும் யதுகிரி தாயாரை தரிசிக்கிறோம். தாயார் கருணையே வடிவாக, அமர்ந்த திருக் கோலத்தில், நான்கு திருக்கரங்களுடன், மேல் இரு திருக்கரங்களில் தாமரை மலர் ஏந்தி, கீழ் திருக்கரங்கள் அபய, வரதமாக பக்தர்களை ரட்சிக்கிறாள். உற்சவ தாயார் செல்வ நாயகி. பக்தர்கள் தாயாருக்கு புடவை சாற்றி, மாலை சாற்றி, குங்கும அர்ச்சனை செய்து வழிபடுகிறார்கள்.

தனி சன்னதியில் ஸ்ரீ இராமானுஜர் பேசும் தெய்வமாக போற்றப்படுகிறார். பன்னிரண்டு வருட காலம் இங்கு தங்கியிருந்த ஸ்ரீ இராமானுஜர் ஸ்ரீரங்கம் திரும்ப எண்ணிய போது, அவரை பிரிய மனம் இல்லாமல் வருந்தி, அடியவர்கள் தவித்த போது, தனது வடிவத்தையே விக்கிரமாக ஆக்கி, அதில் தனது யோக சக்தியை செலுத்தி, ''தமர் உகந்த திருமேனி'' ஆக ஸ்ரீ இராமானுஜர் பிரதிஷ்டை செய்த திருமூர்த்தம். ஆச்சார்யரை வணங்கி, தீர்த்த பிரசாதம் சடாரி சாற்றிக் கொண்டு அவரது பரிபூரண ஆசியை பெறுகிறோம். மிக சுவையான பிரசாதமும் உண்டு.

இங்கு கொண்டாடப்படும் உற்சவத்தில்மிக முக்கியமானது பங்குனி பிரம்மோற்சவம். பங்குனி மாதம் பூச நட்சத்திரம் அன்றுநடைபெறும் ''வைரமுடி சேவை'' மிக பிரசித்தம். உற்சவர்செல்ல பிள்ளை சம்பத்குமாரர் ஸ்ரீ தேவி, பூ தேவிகளுடன் கருட வாகனத்தில் வைரமுடி அலங்காரத்தில் வலம் வருவதை பல ஆயிரம் பக்தர்கள் தரிசிப்பர்.

வைரமுடி உற்சவரை சேர்ந்த புராணக்கதை. பாற்கடல் வாசன் திருநாராயணர் யோக நித்திரை யில் இருக்க, அவரது கீரீடத்தை விரோசனன் எனும் அரக்கன் கவர்ந்து செல்ல, அவனை தொடர்ந்த பெரிய திருவடியாம் கருடர், அவனிடம் போரிட்டு, திருமுடியை மீட்டு வருகிறார். வரும் வழியில் கோகுலத்தில் விளையாடிக் கொண் டிருந்த பால கண்ணனின் அழகில் மயங்கி, குழந்தை கண்ணனுக்கு வெயில் படாமல் இருக்கும்படி, தனது இரு இறக்கைகளை விரித்து குழந்தையை காத்தாராம். அப்போது தன் கையிலிருந்த கீரீடத்தை, குழந்தைக்கு சூட்ட, அந்த கீரீடம் சரியாக பொருந்தியதால், ஸ்ரீ கிருஷ்ணர் திரு நாராயணரின் அவதாரம் தான் என அறிந்து கொண்டாராம். ஸ்ரீ கிருஷ்ணர் அணிந்த வைரமுடி தான் உற்சவர் சம்பத்குமாரர் அணியும் கீரீடம். மைசூர் உடையார் அளித்த ''ராஜமுடி'' கீரீடமும், கிருஷ்ணராஜ உடையார் அளித்த ''கிருஷ்ண ராஜமுடி'' கீரீடமும், திருநாராயணருக்கு சாற்றப்படுகிறது. ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தியும், ஸ்ரீ இராமானுஜ ஜெயந்தியும் மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

–சுபத்திரா
ரங்கநாதன்
ஐதராபாத்.



ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
e-magazine
aanmeegamalar.com

FREE

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# 185 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை



பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...

eBook FREE DOWNLOAD

**aanmeegamalar.com**



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி

இந்து தத்துவத்தில் மௌனம் என்பது பிரம்மத்தை உணரும் ஒரு வழிமுறையாகக் கருதப்படுகிறது மௌனத்தின் மூலம் ஆன்மீக வழியில் மனதை அமைதிப்படுத்தி, உள்மன அமைதியைப் பெறலாம் என்று ஆன்மிகம் கூறு கிறது. மௌனம் என்பது ஜெயின் பௌத்தம் மற்றும் இந்து தத்துவங்களின் ஒருங்கிணைப்பு பகுதியாகும்.

மௌன விரதம் என்பது நமது உடல் உள் ளம் போன்றவைகளுக்கு ஆரோக்கியத்தை மேம் படுத்தும் தன்மை உடையது. உடல் ஆரோக் கியம் நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழி காட்டும்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

மௌன விரதம் நமது அலைபாயும் எண்ணங் களின் துரித வேகத்தை நாளடைவில் படிப்படியாக குறைத்து நாம் தேடும் விரும்பும் மன அமைதியை ஏற்படுத்தும் தன்மை உடையது. நமது மனதில் ஏற்படும் எண்ணக்குவியல்கள் குறையும்போது தியானம் என்பது எளிதில் வசப்படும்.

மௌனம் நமது மனதின் எண்ணங் களை ஒன்றாகக் குவிக்கப்படுகிறது. அதனால் நமது மனம் எந்தவொரு விஷயத்தில் தீவிரமாக ஈடுபடுகிறது என்பதை அறிவுபூர்மாக அறிந்து கொள்ளவும், அதனை சரி செய்வதற்கும் முடியும். உலகியல் பற்றுகள் நாளடைவில் குறைந்து ஆன்மீகப்பற்று ஏற்பட்டு மனம் அமைதியை நோக்கி செல்லும். நமது மனம் நம் வசமாவது நமது ஆன்மீக முன்னேற் றத் திற்கு பெரிதும் துணை புரியும்.



மௌன விரதத்தால் இயல்பாக பேச்சுக்கள் குறைவதால் தேவையற்ற விசயங்களில் சிக்கல்களில் இருந்து மனம் ஈடுபடாமல் விலகி விடும். நமது சக்தி (energy) வீணாவது தடுக்கப்படுகிறது. இதனால் நமது மனம் பஞ்சுபோல் மென்மையாகும்.

நாம் எண்ணிய கருத்துக்களை வெளி யிடவேண்டிய நமது மனதை கட்டுபடுத்தி அல்லது பக்குவப்படுத்தி அதனை வெளியிடாமல் இருக்கும்போது, அந்தக் கருத்துக்கு ஒரு சக்தி வருகின்றது என்று ஆன்மிகம் கூறுகிறது. நாம் எண்ணிய கருத்துக்களை வெளியிட்டுப் பெறக்கூடிய பலன்களைவிட அவற்றை வெளி யிடாமல் இருக்கும்போது கிடைக்கும் பலன் அதிகமானது என்பதை நாம் உணர முடியும். அந்த சக்தி நமது மனோசக்தியாகும். அதாவது மௌனமாக இருக்கும்போது நமது சக்தியுடன் வெளிப்படும் எண்ணத்தின் திறனாகும்.

வார்த்தைகள் இல்லாத புத்தகம் மௌனம். அதனை நாம் வாசிக்க வாசிக்க இதற்குள் வாக்கியங்கள். மௌனம் என்பது ஒரு கோணத்தில் சிந்தித்தால் வெளிச்சம். இதற்குள் நம்மை நாமே தரிசிக்கலாம். மற்றொரு கோணத்தில் சிந்தித்தால் மௌனம் என்பது இருட்டு. இதற்குள் நமது எல்லாத் துன்பங்களையும் புதைக்கலாம்.

மௌனம் கடவுள் மொழி. அது தட்சிணாமூர்த்தி தத்துவம் என்று ஆன்மிகம் கூறுகிறது. ''பிள்ளை மதி செஞ்சடையான் பேசாப் பெருமையினான்'' என்று தாயுமானவர் தனது மௌன குருவைப் பாடி மகிழ்கிறார்.

''நீதி நடஞ்செய் எரின்ப நிதி, அதை ஓதி முடியாது '' என்று வடலூர் வள்ளலார்'' பாடுகிறார். ''சும்மா இரு சொல்லற என்றதுமே அம்மா பொருளென அறிந்திலமே'' என்று முருகப்பெருமான் அருணகிரி நாதருக்கு உபதேசித்த மொழி மௌனமொழி ஆகும்.

கல் ஆலின் கீழ் அமர்ந்து மௌனித்து உடல் மொழியால் (body

86



language) சின் முத்திரை தத்துவத்தை போதித்த தட்சிணாமூர்த்தியை ''வாக்கு இறந்தபூர்ணம் சொல்லாமல் சொன்னவன்'' என்று திருவிளையாடல் புராணம் கூறுகிறது. இந்த மௌனத்தில் மனிதன் தன்னைஉள் நோக்குவதற்கு முடியும். மௌனத்தை கடைபிடிப்பவன் தன்னைத் தானே சுய பரிசோதனை செய்து கொள்கிறான். அதன் மூலம் தனது நிறை குறைகளை அவன் ஆராய்கிறான். அதனால் கோபம் பொறுமையாக மாறுகிறது.

மௌனமாக இருப்பது மன அமைதிக்கு வழி காட்டும். துணை புரியும் நாம் மௌனம் விரதம் கடைபிடிப்பது என்பது சற்று கடினமான செயல் ஆகும். எடுத்துக்காட்டாக ஒரு காட்டில் நான்கு துறவிகள் ஒன்று கூடி தங்கள் ஆசிரமத்தில் ஒரு வாரம் மௌனமாக இருக்க வேண்டும் என்று தங்களுக்குள் தீர்மானம் செய்து கொண்டனர்.

நான்கு துறவிகளும் முதல்நாள் மௌனத்தை கடைபிடிப்பதற்கு ஆரம்பித்தார்கள். அப்போது அவர்களுக்கு முன்பாக எரிந்து கொண்டிருந்த மெழுவர்த்தி எதிர்பாராமல் காற்றில் படபடத்து அணைந்து விடுகிறது.

அதனை பார்த்துக்கொண்டிருந்த முதல் துறவி ஐயோ மெழுகுவர்த்தி அணைந்து ஆசிரமத்தில் இருள் சூழ்ந்து விட்டதே என்று பேசி விட்டார்.

அவர் பேசியதைக் கேட்டதும் இரண்டாவது துறவி நாம் பேசக்கூடாது என்பதை நீ மறந்து விட்டாயா என்று முதல் துறவியிடம் கேட்டதினால் பேசி விட்டார். எதற்காகத்தான் நீங்கள் இரண்டு பேரும் பேசினீர்களோ என்று மூன்றாவது துறவி எரிச்சலுடன் மற்ற இரண்டு துறவிகளைப் பார்த்துக் கோபத்துடன் கேட்டதினால் பேசிவிட்டார்.

நான்காவது துறவி நான்தான் இதுவரையிலும் பேசவில்லை என்று சந்தோஷ மிகுதியில் மற்ற மூன்று துறவிகளைப் பார்த்து பேசி விட்டார்.

நான்கு துறவிகளின் மௌனம் கலைவதற்கு ஆசிரமத்தில் ஒரு பூகம்பம், ஒரு புயல் காற்றோ ஏற்படவில்லை. துறவிகளுக்கு முன்பாகஎரிந்து கொண்டிருந்த ஒரு மெழுகுவர்த்தி காற்றினால் அணைந்து விட்டதால் துறவிகளின் மௌனம் கலைந்தது.

நான்கு துறவிகளின் செயல்களைப் பற்றி சிந்தித்து பார்த்தால், முதல் துறவி மௌனமாக இருக்க வேண்டும் என்பதை முற்றிலும் மறந்தார். இரண்டாவது துறவி மௌனமாக இருப்பதை மறந்து தன்னைச் சுற்றி இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை கவனித்தார். மூன்றாவது துறவி மௌனத்தை மறந்து எரிச்சல்பட்டு கோபப்பட்டார். நான்காவது துறவி மௌனத்தை மறந்து கர்வப்பட்டார்.

கவனச்சிதைவு, தீர்ப்பிடுதல், கோபப்படுதல், கர்வப்படுதல் போன்றவை அவர்களது மௌனத்திற்கு தடைகளாக இருந்தன. முதல் துறவி எடுத்த சபதத்தை முற்றிலும் மறந்தார். இரண்டாவது துறவி சபதத்தில் உறுதியாக இருப்பதைவிட மற்றவர்கள் மீது கவனமாக இருந்தார். மூன்றாவது துறவி சபதத்தை மறந்து இரு துறவிகளின் மீது கோபப்பட்டார். நான்காவது துறவி தனது கர்வத்தால் தனது சபதத்தை மீறி விட்டார்.

நமது மனம் என்பது தவம். இதில் ஆழ்ந்து செல்லும்போது அமைதி உறுதியாக ஏற்படும். மௌனம் என்பது இறைவன் கொடுத்த வரம். மௌனம் நம்மிடம் நாமே பெறுவது. நமக்கு ஏற்படக்கூடிய இன்பங்கள், துன்பங்கள் இரண்டையும் மௌனம் மூலம் சந்திக்கும்போது இதயம் இயல்பாக இருக்கும். பொதுவாக அதிகம் பேசாதவனை உலகம் பெரிதும் விரும்புகிறது. சுருக்கமாக தெளிவாகப் பேசுபவனை இந்த உலகம் மதிக்கிறது. பேசாத முற்றும் துறந்த ஞானியை உலகம் போற்றி வணங்குகிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

– அமைதி தொடரும்


எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
Tahsildar (Retd)
கைபேசி:
9894043308



e-magazine
aanmeegamalar.com

# இந்தியாவில் இந்துமதத்தை பேசாமல் சவுதியிலும், லண்டனிலுமா பேசவேண்டும்?



சமீபத்தில் ஏப்ரல் 16, 2025 இதழில் வெளியான "இந்த நாயன்மார்கள் இருந்திருந்தால் நாக்கு இல்லாமல் பல தலைவர் திரிந்திருப்பார்கள்" என்ற தலைப்பையும் செய்தியையும் பார்த்து பலரிடமிருந்து பலவித விமர்சனங்கள், கருத்துக் கள் நமக்கு மெயில் மற்றும் வாட்சப் வாயிலாக வந்தவண்ணம் உள்ளது.

குறிப்பாக நமது ஆன்மிகமலர் இதழை 'சங்கிகளின் கூடார இதழ்' என்று ஒருசிலர் கூறுகின்றனர்.

அவர்கள் தெளிவடைய வேண்டியதற்காக ஒவ்வொருவருக்கும் நாம் தனித்தனியாக கூற முடியாததால் மொத்த மூடர் கூட்டத்திற்கும் இதன்வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

பாரத தேசம் என்பது

**சைவம்:** சிவனை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்

**வைணவம்:** விஷ்ணுவை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்

**சாக்தம்:** உமையை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்

**காணாபத்தியம்:** கணபதியை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்

**கௌமாரம்:** முருகனை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்

**சௌரம்:** சூரியனை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம்

மேற்கண்ட பிரிவுகளை ஒன்றினைத்தும்,

பல ஆயிரம் கிராம தேவதைகள், பல லட்சம் குலதெய்வங்கள், பல கோடி ஊர் காவல் தெய்வங் கள், குடும்பத்தை காத்து மடிந்தவர்களை தெய் வமாக போற்றி வணங்குதல், தன்னுயிரைபொருட் படுத்தாமல் ஊரை காப்பாற்றியவர்கள், வாழ் விற்கு வழிகாட்டிய மகான்கள், சித்தர்கள், ஆகி யோர் களை ஒருங்கிணைத்து, முழுவதுமாக இந்து மதம் என்று ஒரு உருவம் பெற்று திகழ் கிறது.

இதுபோன்ற இந்து மத உருவத்தில் ஒன்றி ணைந்த எந்த தெய்வத்தையும், மற்ற நாட்டவர், மற்ற நாட்டு மக்கள் பின்பற்றுமாறு, எந்த இந்துக்களும் பிரசாரம் செய்தது கிடையாது.

மேற்கண்ட பிரிவினர் கடைபிடிக்கும் இந்து மதம் உலகிற்கும் உலக மக்களுக்கும் நன்மை மட்டுமே போதிக்கிறது. எந்த இடத்திலும், கத்தியையும், துப்பாக்கியையும் போதித்ததில்லை.

எந்த ஒரு இந்துவும் ஆயுதம் ஏந்தக்கூடாது என்பதால், அனைத்து ஆயுதங்களையும், இந்து மத கடவுள்கள் தங்கள் வசம், தங்களுக்கு உகந்த ஆயுதமாக வைத்துக்கொண்டனர்.

இதில் இன்னுமொறு செய்தி என்னவென்றால் மேற்கண்ட கடவுளை பிடிக்காமல், வணங் காமல் இருந்தாலும் அவர்களையும் கட்டாயப்படுத்துவ தில்லை.

மொத்தத்தில் மனிதர்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்த ஒரே மதம் இந்து மதம், மனித குலத்திற்கு நன்மை செய்யும் அனைத்தையும் கடவுளாக பார்க்க சொல்லுவது நமது இந்துமதம். இதனால்தான் நமது இந்து மதத்தை நாடி, தேடி வெளிநாட்டவர்கள் கூட்டம் இந்தியாவில் படையெடுத்து வருகிறது.

ஆனால் ஒருசில தற்குறிகள் இந்து மதத்தின் கருத்துக்களையும், புராண இதிகாசங்களையும் விரிவாக அலசி ஆராய்ந்து அதை மக்களுக்கு எடுத்துக் கூறினால், மதவாதம் செய்கிறீர்கள் என்று புலம்புகிறது.

இந்தியாவில் இந்து மத கருத்துக்களை சொல்லாமல், வெளிநாட்டிலா சொல்ல முடியும்,

e-magazine
aanmeegamalar.com

வெளிநாட்டு மதத்தவர்கள் தங்கள் மதங்களை இந்தியாவில் பரப்பி, கூட்டம் போட்டு, சோறு போட்டு, பயமுறுத்தி இந்தியாவில் உள்ள மக் களை மூளைச்சலவை செய்து, மதமாற்றம் செய்து வருகின்றனர்.

ஆனால் அதைப்பற்றி பேச துணிவில்லாத வீணர்கள், கிழட்டு கூட்டங்கள், இந்தியாவில் இந்து மதத்தைபற்றி பேசக்கூடாது, இந்து சமய சொற்பொழிவுகள் நடத்த கூடாது, இந்துக்கள் மாநாடு நடத்தக்கூடாது என்றும், இந்துக்கள் வெளிநாட்டு மதவாதிகள் தங்கியிருக்கும் பகுதியில் திருவிழாக்கள் நடத்தக்கூடாது என்று கூறுவது எந்த அளவிற்கு நியாயம்?

இந்துக்களின் பூமியில் மற்ற மதத்தவர் சுதந்திரமாக தங்கள் மதங்களைப் பரப்புவது தவறில்லை, இந்துக்களின் நாட்டில் இந்து மத கருத்துகளுக்கும், இந்துமதத்திற்கும் தடைவி திப்பதுகூட இந்துக்களை ஒடுக்கும், இந்து மதத்தை அழிக்கும் செயலாகவே உள்ளது.

இந்துக்கள் நாட்டில் இந்துமத கடவுள்களைப் பற்றி பேசாமல், லண்டனிலும், சவுதியிலுமா இந்து மத கடவுள்களையும், இந்து மத திரு விழாக்களையும் நடத்த முடியும்?

முகலாயர்கள், வெள்ளைக்காரர்கள், வரிசை யில் தற்போது இந்து மதத்திற்கு எதிராக இந்தியாவில் குடியேறியுள்ள வந்தேறிகளை வெளியேற்றவில்லையென்றால், இன்னும் சில காலங்களில் இந்து மதத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகவே மாறும்.

இந்தியாவில் சொந்த மதத்திற்கு சுதந்திரம் வேண்டும்? வெளிநாட்டு மதங்களுக்கு கட்டுப் பாடு வேண்டும்?

சொந்த அப்பா, அம்மா இருக்கும்போது, எங்க ளுக்கு எதற்கு ஊர் பெயர் தெரியாத வாடகை அப்பா அம்மா.

சொந்த நாட்டில் எங்கள் மூதாதையர் வழிபட்ட கடவுள்கள் இருக்கும்போது, அவர்களை ஆக்கிர மித்து வெளிநாட்டு கடவுள்களுக்கு அரசு முக்கி யத்துவம் தருவது ஏன்?

இன்னும் ஒருசில மூடர்கள், இந்து மதத்தில் ஏற்ற தாழ்வு உள்ளதாக கூறுகின்றனர். உலகம் தோன்றியதிலிருந்து ஏற்றத் தாழ்வுகள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன.

நவீன உலகமாக காட்சியளிக்கும் இந்த நூற்றாண்டில் கூட ஏற்றத் தாழ்வுகள் ஜாதி, மத ரீதியாக இல்லாமல், பணம் படைத்தவன், பதவியில் இருப்பவன், அதிகாரத்தில் மிதப்பவன் என்ற வழிமுறைகளில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கத்தான் செய்கிறது.

ஜாதி, மதத்தை ஒழிக்க புறப்பட்ட தலைவர்களிடம் கூட சமுதாய ஏற்றத்தாழ்வுகள் இருக்கத்தான் செய்கிறது. அற்ப கவுன்சிலர் துவங்கி, ஆளும் அமைச்சர்கள் வரை உள்ளவர்களை ஒரு சாமான்ய மனிதன் நெருங்க முடியுமா?

இதுபோன்று அந்தக் காலத்தில் ஒருசில சமுதாய மக்களை நெருங்க முடியாமல் அவதிப் பட்ட மக்கள், நெருங்க முடியாத சமுதாய மக்களை உயர்ஜாதி என்றும், தங்களை தாழ்ந்த ஜாதி என்றும் முத்திரை குத்தி வாழ்ந்தனர்.

ஆனால் இன்று ஜாதி பாகுபாடு இல்லாமல் பணம், பதவி, அதிகாரம் போன்றவற்றை பெற்றவர்கள் உயர்ந்த ஜாதியாகவும், இவை ஏதும் இல்லாத சாமான்ய மக்கள் தாழ்ந்த ஜாதியாகவுமே திகழ்கிறார்கள்.

இந்த ஏற்ற தாழ்வை எந்த காலத்திலும் இந்து மதம் உருவாக்க வில்லை, மனிதன்தான் உருவாக்கிக் கொள்கிறான்.

இஸ்லாம் நாடுகளில் தங்கள் மதத்தை இழிவாக பேசினால் மிக கொடூரமான தண்டனை வழங்குகின்றனர், கிறிஸ்தவ நாடுகளில் மதத்தை இழிவுபடுத்தினால் சிறைச்சாலையில் அடைக்கின்றனர்.

ஆனால் இந்துக்களின் நாட்டில் இந்துமதத்தை இழிவாக பேசினால், அவர்களுக்கு பாராட்டு விழா நடத்துகின்றனர், இந்துமதத்தை இழிவு படுத்தும் மூடர்கள் மற்ற மதத்தை பற்றி வாய் திறக்க அஞ்சுகின்றனர், குலை நடுங்கும் குரங்கு போன்று நடுங்குகின்றனர்.

மேற்கண்ட நடுக்கத்தை ஒவ்வொரு இந்துக் களும், இந்து மதத்தை இழிவுபடுத்துபவர்களுக்கு காட்டினால் என்னவாகும்?

இந்தியாவில் உள்ள கோவில்கள், புராணம், இதிகாசம், கலையம்சம் நிறைந்த கட்டிடக்கலை, வாழ்வியல் முறை போன்றவற்றை வெளிநாட்டினர் தெரிந்து கொள்ளும் வகையில் நமது அரசு செயல்பட்டால் உலகின் மாசற்ற குருவாக பாரதம் திகழும்.

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com



# gsspecialfood

கீதாசமையல்

ஆன்லைன் இயற்கை உணவுப்பொருள் அங்காடி

வல்லாரை கீரை இட்லிபொடி

கறிவேப்பிலை இட்லிபொடி

தூதுவளை கீரை இட்லிபொடி

கொள்ளு இட்லிபொடி

முடக்கத்தான் கீரை இட்லிபொடி

பிரண்டை இட்லிபொடி

பூண்டு இட்லி பொடி

எள் இட்லிபொடி










**சத்துமாவு**
41வகை தானியங்களில் தயாரிக்கப்பட்டது

**நலங்கு மாவு**
35 வகை மூலிகைகளில் தயாரிக்கப்பட்டது

**கருப்பு உளுந்து**
கஞ்சிமாவு

**சின்ன வெங்காய வடகம்**

**புளிசாதப் பொடி**

**வெயிட் லாஸ் கஞ்சி மாவு**

**கீழே உள்ள வாட்சப் எண்ணில் தொடர்பு கொண்டு வாங்கிக் கொள்ளலாம் கொரியரில் அனுப்பப்படும்**

7550199561

gsspecialfood.com

